பொதுசன நூலகம்
24 JUL 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 09 | சனிக்கிழமை | (24.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 218

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க இரு பிரச்சினைகள் தடையாகவுள்ளன

### சமாதான செயலக பணிப்பாளர் ஜயந்த தனபால



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக இரு முக்கிய சிக்கல்கள் காணப்படுவதாக அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை ஒருங்கிணைக்கும் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதே முதன்மையான பிரச்சினை. இதனைத் தவிர கருணா விவகாரமும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் விடயத்தில் சிக்கல்களை தோற்றுவித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கும் திகதி மற்றும் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடமிருந்து எழுத்துமூலமான இணக்கப்பாட்டைக் கோரியுள்ளனர். கடந்த ஜூன் மாதத்தில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளதாக ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆதரவாளர் நேற்று சுட்டுக் கொலை!

### மட்டக்களப்பு வாகரையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பிரதேசத்திலுள்ள புளியங்கண்டலடி என்னும் இடத்தில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் சீனித்தம்பி மகாலிங்கம் (வயது 28) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கட்டுமுறிவு-கதிரவெளி வீதியில் மோட்டார் சைக்கிளில் பிரஸ்தாப நபர் சென்று கொண்டிருந்த சமயம் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு - பொலநறுவை மாவட்ட எல்லைப் புறத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதால் பொலநறுவை மாவட்ட எல்லையில் இருந்து தமது கட்டுப்பாட்டுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கவே

# பிரதமர் இந்தியா சென்றிருந்தார்

## அதிர்ச்சித் தகவல் கசிவு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதற்குரிய ஆசியையும், ஆதரவையும் இந்திய அரசாங்கத்திடம் பெற்றுக்கொள்வதற்காகவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கான விஜயத்தை அவசரமாக மேற்கொண்டிருந்ததாக தற்போது அதிர்ச்சித் தகவல்கள் கசிந்துள்ளன.**

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குள் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமை காரணமாகவும் யுத்தம் ஒன்றுக்கான தயார்படுத்தலை நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டின் அடிப்படையிலும் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் ஒன்று ஏற்

களில் இருந்து கசியத் தொடங்கியுள்ளது.

நோர்வேத் தரப்பின் சமாதான அனுசரணைக்கு அப்பால் யுத்தம் ஒன்றை திணிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை பலவீனமடையச் செய்யமுடியும் என்ற படைத்தரப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை 8 ரூபாய் அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலை நேற்று நள்ளிரவில் இருந்து 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களுக்குத் தேவையான எரிபொருட்களை அரசு மானிய விலையிலேயே வழங்கி வந்தது.

எனினும், தவிர்க்கமுடியாத காரணத்தினால் பெற்றோலின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சாலிய தினகம தெரிவித்தார்.

இதேவேள்ளை, ஏனைய எரிபொருட்களின் விலையில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஜயந்த தனபால – ஹெவ்டே சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியூறு ஹெவ்டே நேற்று முன்தினம் மாலை சமாதான செயலக பணிப்பாளர் ஜயந்த தனபாலவைச் சந்தித்து கிளிநொச்சியில் நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து விபரித்துள்ளார்.

கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இதேவேளை, ஏனைய எரிபொருட்களின் விலையில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்பொழுது சந்தையில் லீற்றர் 57 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவந்த பெற்றோல் புதிய விலையின்படி 65 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. (ச)

விடுதலைப் புலிகளுடன் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு இந்தியாவின் அனுசரணையை பெற்றுக்கொள்வதற்காகவே பிரதமர் இந்திய விஜயத்தை மேற்கொண்டிருந்தார் என்ற அதிர்ச்சித் தகவல் இராஜதந்திர வட்டாரங்

# செல்லக்கிளியின் நினைவுநாள் நேற்று சிறப்பாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன்முதலாக இடம்பெற்ற கெரில்லாத் தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரன் லெப்டினென்ட் செல்லக்கிளி அம்மானின் 21 ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்று யாழ்ப்பாணத்தில் சிறப்பான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

1983 யூலை 23 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளால் படையினரின் வாகனத். தொடரணி மீது கெரில்லாத் தாக்குதல் நடத்தப்பட்ட திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் நிறுவப்பட்ட செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபியில் இந் நினைவு நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

காலை 9.30 மணிக்கு சர்வதேச மாணவ பேரவைத் தலைவர் பகீரதன் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில்,

ஈகச் சுடரினை யாழ். பல்கலைக்கழக வணிக பீடத்துறை தலைவர் எஸ்.தேவராஜா, யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் எஸ். இராஜரட்ணம், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, தமிழீழ மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த சுரேந்திரன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த யாழ்சேரன் ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து செல்லக்கிளி அம்மானின் திருவுருவப்படத்துக்கான மலர் மாலையினை யாழ்சேரனும், நினைவுக் கல்லுக்கான மலர் மாலையினை யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணனும் அணிவித்தனர்.

தொடர்ந்து அக வணக்கத்துடன் மலர் வணக்கம் செய்யப்பட்டது. இந் நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(இ-121-05-43)

# விடுதலைப்புலிகள் - இராணுவம் திருமலையில் சந்தித்துப் பேச்சு

(திருகோணமலை)

யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பது தொடர்பாக படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று திருகோணமலை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

மூதூர் பகுதியில் அண்மையில் நடைபெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக இச் சந்திப்பில் ஆராயப்பட்டதுடன், இவ்வாறான கொலைச் சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் இரு தரப்பும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

பிரச்சினைகள் ஏற்பட்டால் பிரச்சினைக்குரிய அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு இரு தரப்பினரிடையேயும் இணக்கம் காணப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே தூதரகத்திற்கு முன் சடலம் வைத்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தலைவரும் ஈ.பி.டி.பியின் அமைப்பாளருமான வேலாயுதம் இரவீந்திரனின் பூதவுடல் நேற்று கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தின் முன்னால் வைக்கப்பட்டு அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 22 ஆம் திகதி பிரஸ்தாப நபர் அக்கரைப்பற்று பேருந்து நிலையத்திற்கு முன்னால வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது சடலத்தை அவரது ஆதரவாளர்கள் கொழும்புக்கு கொண்டு சென்று நோர்வேத் தூதரகத்தின் முன்னால் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின்போது நோர்வேத் தூதுவரிடம் கோரிக்கை மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

இக் கோரிக்கை மனுவில் தமது


(10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Tour de France Diary

# 17 ஆவது சுற்றிலும் வென்ற ஆம்ஸ்ரோங், லண்டிசைப் புகழ்ந்தார்

மலைகளின் மன்னன் என்று புகழப்படும் அமெரிக்கப் போஸ்டல் அணியின் தலைவர் லான்ஸ் ஆம்ஸ்ரோங், நடைபெற்றுவரும் ரூர் பிரான்ஸின் 17வது சுற்றிலும் ஹற்றிக் முறையில் வெற்றிபெற்று



சுற்றுத் தொடரின் நாயகன் ஸ்தானத்தை மிக உறுதிப்படுத்தினார்.

20சுற்றுக்களடங்கிய இப் போட்டியில் நான்காவது சுற்று வெற்றியை அவர் பெற்றுள்ளார். தொடரின் 15,16,17வது சுற்றுக்களை அவர் தொடர்ச்சியாக வென்றுள்ளார். தனது வாழ்நாளில் ரூர் டி பிரான்ஸ் போட்டியில் அவர் பெற்ற 24சுற்றுத் தொடர் வெற்றி இதுவாகும். நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடையும் இப் போட்டியில் தனது எதிராளிகளை அவர் பின்தள்ளியுள்ளார்.

204.5கிலோ மீற்றர் தூரமான இத் தொடரில் அவரது போஸ்டல் அணி வீரரான லண்டிஸ் ஆரம்பம் முதல் முன்னணியில் வந்தார் ஆம்ஸ்ரோங் இவருக்கு அடுத்தபடியாக வந்துகொண்டிருந்தார். அவரது எதிராளிகளான உல்ரிச், பாஸோ மற்றும் குளோடன் ஆகியோர் அடுத்தநிலையில் தொடர்ந்தனர். லண்டிலே இத்தொடரை வெல்லவேண்டும் என்று ஆம்ஸ்ரோங் ஊக்கம் கொடுத்தார். ஆனால், அவர் அதை மறுத்துவிட்டார். அதன்பிற்பாடே ஆம்ஸ்ரோங் அசுர வேகமெடுத்துத் தனது எதிராளிகளை மண்கௌவ வைத்தார்.

லண்டிஸ்ஸின் திறமை அளவிடங்கரியது. நாளுக்கு நாள் மெருகேறிக்கொண்டே வருகிறார். இன்றைய நாள் அவருடைய இந்த வெற்றி அவருக்குச் சமர்ப்பணம்" என்று ஆம்ஸரோங் தெரிவித்தார். (யே)

# முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 391—2

## ராணி எலிசபெத் பார்வையாளராக

தற்பொழுது மேற்கிந்தியத்தீவுகள் அணியுடன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி இரண்டு விக்கெற் நஷ்டத்திற்கு 391ஓட்டங்களைப் பெற்றது.



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியொன்றில் இரண்டாவது விக்கெற்றுக்களை அதிகூடிய இணைப்பு ஆட்டமாக 291ஓட்டங்களை ரொப்கீயும் அன்று ஸ்ரோஸ்சும் பெற்றனர்.



தனது கன்னிச் சதத்தைப் பூர்த்திசெய்த கீ 167ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலிருந்தார். ஸ்ரொஸ் 137ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அணித்தலைவா மைக்கல வோகன் ஆட்டமிழக்காமல் 36ஓட்டங்களுடன் களத்திலிருந்தார்.

இப் போட்டியில் ரொப் கீ 23புவுண்டரிகளையும் ஸ்ரொஸ் 20பவுண்டரிகளையும் விளாசினர். ரொப் கிரோவினியும் பீற்றர் ரிச்சாட்ஸனும் 1957ல் தென்னாபிரிக்காவிற்கெதிரான போட்டியில் 266ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்ட பரபரப்பை கீயும் ஸ்ரொஸ்சும் லொர்ட்ஸில் வழங்கினர். எலிசபத் மகாராணி டெஸ்ட் போட்டியில் பார்வையாளராகக் கலந்துகொண்டார். இது அவர் பார்வையிடும் 30வது டெஸ்டாகும். (யே)

# வீனஸ் வில்லியம்ஸ் மூன்றாவது சுற்றில்

தற்பொழுது அமெரிக்காவில் இடம்பெற்றுவரும் ஜே.பி.மோர்கன்ஸ் பகிரங்க டெனிஸ் சுற்றுப்போட்டிகளின் மூன்றாவது சுற்றில் விளையாட அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் தகுதிபெற்றுள்ளார்.




. ரெனிஸ் தரப்படுத்தலில் இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கும் வீனஸ் வில்லியம்ஸ் அஷ்ரி ஹார்க் கோட்டிற்கு எதிரான போட்டியொன்றில் 6-2,6-1 எனும் நேர் செற்களில் வெற்றிபெற்றார். 50நிமிட நேரத்தில் இப் போட்டியை அவர் முடித்துக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

விம்பிள்டனில் மிகப்பின்னடைவுகளை எதிர்நோக்கிய வீனஸ் மீண்டும் தனது பழைய ஸ்தானத்திற்கு திரும்பும் முயற்சியிலிருக்கிறார். இப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்திற்கு வருவதைக் கனவாகக் கொண்டுள்ளதாக வில்லியம்ஸ் குறிப்பிட்டார். (யே)

## ஜேர்மன் கிராண்ட் பிரிக்ஸ்

# மைக்கல் சூமாக்கருக்கு மக்—லரன் சவாலாக விளங்கும்!

நாளை நடைபெறவிருக்கும் ஜேர்மன் கிராண்ட பிரிக்ஸ் போட்டியில் அரை தசாப்தகாலமாக முன்னணியில் இருக்கும் மைக்கல் சூமாக்கருக்கும் அவரது பெராரி கார்களுக்கும் களத்தில் இறக்கப் பட்டிருக்கும் நவீன மக்லரன் கார்கள் கடும் சவாலாக விளங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



புதிய மக்லரன் கார்கள் உருவாக்கப்பட்ட ஒருவாரத்தினுள் இடம்பெற்ற பிரெஞ்சு கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் முன்னணிச் சாரதியான கிமிராய்க் கொனன் மைக்கல் சூமாக்கருடன் திகிலூட்டும் கடும் போட்டியில் ஈடுபட்டார். ஒரு கட்டத்தில் அவரைத் தாண்டிச் செல்லும் அளவுக்கு கடுமையாக வந்து நெருக்கினார். இப் போட்டியில் அவர் மயிரிழையில் முதலிடத்தைத் தவறவிட்டார்.

கிமி ரய்க்கொனன், மற்றும் டேவிட் கோல்தாட் போன்ற உலகின் முன்னணி சாரதிகளுடன் களமிறங்கும் மக்-லரன் அணி கிராண்ட் பிரிக்ஸ் போட்டிகளில் திருப்புமுனையை ஏற்படுத்துமா என்பதை உலகம் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறது. (யே)

# மாநகர, நகர, பிரதேச சபை கிரிக்கெற் சுற்றுப்போட்டி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேசசபைகள், மாநகரசபை மற்றும் நகரசபைகளில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கிடையே 15ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டி ஒன்றை வலி.தென்மேற்கு பிரதேசசபை ஒழுங்குசெய்துள்ளது. இது தொடர்பாக பிரதேசசபையின் செயலாளர் பி.விக்டர் 16உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தும் 15பேர் கொண்ட அணியின் விபரங்களை தந்துதவுமாறு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

மேலும் இச் சுற்றுப்போட்டிகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் நடாத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் உள்ளூராட்சி மன்றத்திற்கு பரிசில்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணிகளின் விபரம் கிடைக்கப்பெற்றதும் போட்டிக்கான திகதிகள் நிர்ணயிக்கப்பட்டு போட்டிகள் ஆரம்பமாகும் எனவும் இது தொடர்பான மேலதிக விபரங்களைப்பெற மானிப்பாய் பிரதேசசபையின் உள்ளூராட்சி உதவியாளருடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (யே)

# விளையாட்டுச் செய்திகள்


ATHENS 2004

ஒலிம்பிக்கிற்கு இன்னும் 20 தினங்கள்

## எதென்சுக்கு வாருங்கள் பகுதி VII

# எதென்ஸ் ஒலிம்பிக் மைதானங்கள் ஜூடோ உள்ளக ஸ்ரேடியம்

சுமார் 56மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப்பட்டுள்ள ஜூடோ உள்ளக ஒலிம்பிக் ரேடியம் எதன்ஸ்சிலிருந்து பதின்மூன்று கிலோமீற்றர் தொலைவிலுள்ள அனோ லியோசியா மாவட்டத்தில் அமைந்திருக்கிறது.



மல்யுத்தம், ஜூடோ மற்றும் சில பரா ஒலிம்பிக் போட்டிக்கான குத்துச்சண்டை நிகழ்வுகளும் இங்கு நடைபெற ஏற்பாடாகியிருக்கின்றன. உலகப் புகழ்பெற்ற கட்டிடக்கலை நிபுணர்களான மொல்பொஸிஸ், ஜெனியாஸ் ஆகிய இருவராலும் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஸ்ரேடியமே உலகின் தலைசிறந்த ஜூடோ ஸ்ரேடியமாகக் கருதப்படுகிறது.

ஒன்பதாயிரம் பார்வையாளருக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஸ்ரேடியத்தில் 730 போட்டியாளர்கள் பங்கேற்கவுள்ளனர். ஓகஸ்ட் 14-20 வரை ஜூடோவும், ஓகஸ்ட் 22-29வரை மல்யுத்தமும் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. செப்டெம்பர் 18தொடக்கம் 28வரை குத்துச்சண்டை மற்றும் ஜூடோ போட்டிகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. (யே)

## இன்று ஒரு தகவல்

# பெரியார்

ஒருமுறை பெரியார் தனது தங்கையின் வீட்டிறகுச் சாப்பிடப் போயிருந்தாராம்.தங்கை வீட்டில ஏதாவது விசேஷமான சமையல் என்றால் இவரைச் சாப்பிட அழைப்பார்களாம். அதுபோல் அன்றைக்கும் அழைத்திருக்கிறார். இவர் போனார்.

இவரது தங்கைக்கு ஒருமகன்.அவனுக்கு 9 வயது. அவன்தான் ஓடிவந்து இவரைக் கூட்டிக் கொண்டு போவது வழக்கம்.வழக்கப்படி அந்தப் பையன்தான் ஒரு செம்பில் தண்ணீா எடுத்து வந்து கை அலம்புவதற்காக ஊற்றுவான். பெரியாா அதில் கைகழுவிக் கொள்வார்.

இப்படித்தான் ஒருசமயம் அந்தச் சிறுவன் மிகவும் அககறையாக ஒரு செம்பில் நீர் எடுத்துக் கொண்டு ஓடிவந்தான். குனிந்து அதை ஊற்றிக் கொண்டே இருந்தான்.பெரியார் கையைக் கழு விக கொண்டே இருந்தார். அந்தச் சமயத்தில் நீர் ஊற்றிக கொண்டிருந்த அநதப் பையனின் தலையில் 'பொட்' டென்று ஓர் அடி விழுந்தது.யார் என்று நிமிர்ந்து பாாத்தான்.பார்த்தால் பெரியார் தான் தனது மறுகை யால் அப்படித் தட்டியிருக்கிறார்.

ஏன இப்படித் தலையில் அடித்தார் என்று அந்தப் பையனுக்குப் புரியவில்லை. திகைத்துப் போய் நின்று விட்டான். ஒன்றும் கேட்கவில்லை. இருந்தாலும் பெரியார் சும்மாவிடவில்லை. அந்தப் பையனைப் பார்த்து"ஏன் அடித்தீாகள் என்று கேள்" என்றார்.'ஏன் அடித்தீர்கள்?" என்று கேட்டான் அந்தப் பையன்.

அதற்குப் பெரியார் சொன்னார். இது தண்ணீராக இருப்பதனால்தான் இப்படித்தாராளமாக ஊற்றுகிறாய்? நெய்யாக இருந்தால் அதை இப்படி ஊற்றுவாயா?தண்ணீராக இருந்தாலும் அதை அள வுடனதான் செலவு செய்யவேண்டும்.வீணாக்கக் கூடாது என்றாராம்.

இது இந்தக் காலத்திற்கும் ஏற்ற ஓர் அறிவுரை. அநதப் பையன் அப்போதே இந்த அறிவுரையை மனதல் வைத்துக் கொண்டான்.அவர் பிற்காலத்தில் வாழ்க்கையிலும் வியாபாரத்திலும் முன்னேற அது மிகவும் உபயோகமாக இருந்தது.

பெரியவர்கள் எல்லோரும் நம்மிடம் சிறுசிறு விடயங்களுக்கெல்லாம் சிக்கனமாக இருக்கச் சொல்வார்கள். அப்போதெல்லாம் அது நமக்கு வேடிக்கையாகத் தெரியும்.அந்த மாதிரி அறிவுரைகளின் மதிப்பு பின்னாளில் அனுபவத்தில் தான் நமககுப் புரியும்.இதைவிட வேடிக்கையான சம்ப வம் ஒன்று உண்டு.

பெரியார் ஒரு முறை தனது உதவியாளர் ஒருவரை அழைத்தாராம்.அவர் வந்து நின்று "என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டிருக்கிறார். யாரோ ஒருவருக்கு ஒரு தந்தி கொடுக்கச் சொன்னாராம். தந்தியில் கொடுக்கவேண்டிய விடயம் என்னவென்று கேட்டிருக்கிறார் உதவியாளர். "ஏற்கனவே சொல்லியாகிவிட்டது'' என்ற விடயத்தைத்தான் தந்தியில் சொல்ல வேண்டும். அதிகமான வார்த்தைகளைச் செலவு செய்யாமல் சுருக்கமாகக் கொடு'' என்று கூறி அதற்கான பணத்தையும் கொடுத்தனுப்பினாராம்.

அந்த உதவியாளர் உடனே போய்த் தந்தியைக் கொடுத்துவிட்டு வந்து விட்டார். பெரியார் "தந்தி வாச கம் என்ன?" என்று கேட்டாராம்"**Already Told**" என்று இரண்டே வார்த்தையில் கொடுத்து விட்டேன் என்றார் அவர் பெருமையாக.''இன்னும் சிறிது சுருக்கியிக்கலாமே. ஒரே வார்த்தையில் அதைச் சொல்ல முடியாதா? என்றாா பெரியார்.''அது எப்படி முடியும்?''என்றார்பெரியார். "ஏன்**Tolded** என்று கொடுக்க வேண்டியது தானே" என்றாராம்."அப்படி ஒரு வார்த்தை இங்கிலீஸில் இல்லையே'' என்றாராம். "இல்லாவிட்டால் என்ன? விஷயம் புரியுமா இல்லையா? தந்தியை வாங்குபவர் அதைப்புரிந்து கொள்ள மாட்டாரா?'' என்றாராம் பெரியார்.

ஒருமுறை பெரியார் ஒரு மேடையில் உட்கார்ந்திருக்கிறார்.மேடைக்கு எதிரில் கீழே முதல் வரிசையில் அவருக்கு எதிரில் கால்மேல் கால்போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார் ஒருவர்.இதைப் பார்த்துவிட்டுப் பெரியாரிடம் சொன்னாராம் "பாருங்கள் அவனை சிறிதுகூட மரியாதை இல்லாமல் கால்மேல போட்டுக் கொண்டு உட்கார்ந் திருக்கிறான்" என்றாராம். பெரியார் மெதுவாக இவர் பக்கம் திரும்பி "அவனது காலை அவன்கால் மேல் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். இதில் நமக்கு எங்கே மரியாதை குறைந்தது" என்றாராம்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# இலங்கையின் சமாதான முயற்சியில் இந்தியாவுக்கு அக்கறை இல்லை

## முன்னாள் அமைச்சர் பண்டிருட்டி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளில் இந்தியா உண்மையான அக்கறை கொள்ளவில்லை என்று முன்னாள் தமிழ்நாடு முதல்வர் மறைந்த எம்.ஜி.இராமச்சந்திரனின் நெருங்கிய சகாவும்,முன்னாள் அமைச்சருமான பண்டிருட்டி ராமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார்.

சமாதான முயற்சிகளில் அக்கறை கொண்டிருப்பதுபோல உலகத்தை இந்தியா ஏமாற்றி வருவதாகவும் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் பண்டிருட்டி ராமச் சந்திரன் கூறியுள்ளார். விடுதலைப்புலிகளை முறியடிப்பதே இந்தியாவினதும் இலங்கை அரசாங்கத்தினதும் வஞ்சகமான எண்ணமாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சமாதான முயற்சிகளில் மிகவும் குறைந்த பட்ச அக்கறையை இந்தியா கொண்டிருக்கும் போது, அனுசரணை வழங்கும் பேச்சுக்கே இடமில்லை என்று கூறினார்.

சொந்த நாட்டில் கிளர்ச்சி செய்து வரும் நாகலாந்து தீவிரவாத அமைப்புக்களுடன் இந்தியா பேச்சு நடத்தும் போது,விடுதலைப்புலிகள் மீதான தடையை ஏன் நீக்க முடியாது என்று அவர் கேள்வி எழுப்பினார். விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் தாமதமாவதற்கு இரு தரப்பினருக்கும் இடையே நம்பிக்கை நிலவாதிருப்பதே காரணம்.

விடுதலைப் புலிகள் உண்மையாகவே சமாதானத் தீர்வை விரும்புகிறார்களா என்று இறுதிவரை பொறுமையை சோதிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயல்வதாகவும்,இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அமைக்க அரசாங்கம் தயாரா என்பதை உறுதிப்படுத்த விடுதலைப் புலிகள் விரும்புவதாகவும் அப்பேட்டியில் ராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

(ச-121)

# அரசு-புலிகளுக்கு இடையிலான நேரடிப் பேச்சுக்களில் பங்கேற்க இந்திய அரசு மறுப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்த உதவுவதற்கு இந்திய அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

சமாதான முயற்சிகளில் அனுசரணை வழங்கிவரும் நோர்வேயை இந்த முயற்சிகளில் இருந்து தவிர்க்கும் நோக்கத்தோடு,விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் உதவவேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்திருந்த கோரிக்கையை இந்தயத் தலைவர்கள் நிராகரித்து விட்டதாக ஆசிய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை இந்திய அரசாங்கம் தடை செய்திருககும் காரணத்தால் இந்த முயற்சியில் இந்திய அரசாங்கத்தினால் சட்டரீதியாக ஈடுபடமுடியாதென காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி,இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்ஷித் ஆகியோர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கோரிக்கையை நிராகரித்திருப்பதாக அவ் ஆசிய ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை,இலங்கையின் பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் கூடுதல் ஒத்துழைப்பு வழங்க இந்தியத் தலைவர்கள் உறுதியளித்திருக்கின்றனர். விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை இலங்கையுடன் பரிமாற்றம் செய்து கொள்வதற்குத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உறுதியளித்திருக்கிறார்.

இலங்கை பாதுகாப்பு துறையின் நடவடிக்கைகளைத் துல்லியமாகக் கண்காணிக்கும் வல்லமை கொண்ட நவீன தொழில்நுட்ப உபகரணங்களை விடுதலைப்புலிகள் பயன்படுத்திவருவது போன்ற பல தகவல்களை இந்தியப் புலனாய்வுத்துறை இலங்கைப் படைத்துறைக்குத் தெரிவித்திருப்பதாகவும் அந்த ஊடகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.(121)

## இராசி பலன்

**24.07.2004**

**(ஆடி 09, சனிக்கிழமை)**

**சப்தமி மாலை 6.09 மணி வரை**

**சித்திரை பின்னிரவு 2.48மணி வரை**

**இராகுகாலம் 9.02-10.32 மணி வரை**

**சுபநேரம் 3.02-4.32 மணி வரை**

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, அபூர்வ சந்திப்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், தன லாபம்.

**இடபம்**
சுவாரஸ்யம், திடீர் பயணம், சுகவாழ்வு, பண வருவாய.

**மிதுனம்**
தாழ்ந்த சுபாவம், குடும்பக்கவலை, முயற்சி தாமதம், உடல்நலக்குறைவு.

**கடகம்**
கல்வியில் ஆர்வம், அற்பர் நேசம், பயந்த சுபாவம், காரியதாமதம்.

**சங்கம்**
கூட்டுமுயற்சி, இனிய நிகழ்வு, அன்னியர் சந்திப்பு, தனவரவு.

**கன்னி**
கௌரவக்குறைவு, காரியதாமதம், தொழிலில் ஆர்வம், பணவிரயம்.

**துலாம்**
நல்லமுயற்சி, ஆழ்ந்த சிந்தை, புதியபொருள் சேர்க்கை, நிலைமாற்றம்.

**விருச்சிகம்**
பிதா சிந்தை, ரோகநிலை, அபகீர்த்தி, காரிய தாமதம்.

**தனுசு**
மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, பிரயாணம், காரிய அனுகூலம்.

**மகரம்**
தொழில் சிறப்பு, சுபநிகழ்ச்சி, அதிகபிரயாசை, நண்பர்கள் உதவி.

**கும்பம்**
உடல் உழைப்பு, புதியதிட்டமிடல், வயிற்றுவலி, அச்சமான நிலை.

**மீனம்**
வீண்தொல்லை, முயற்சி தடங்கல், வாகன பயம், போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## பாராளுமன்றத்தின் உரிமைகள் மீறப்பட்டதாகப் போர்க்கொடி

(கொழும்பு)

தனியார் தொலைக்காட்சி நிலையத்தினால் சமீபத்தில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்சி ஒன்று பாராளுமன்றத்தின் உரிமைகளை மீறியுள்ளது என்று அரசாங்க பிரதம கொறடாவான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உணவு இந்த நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதனால் பாராளுமன்ற வழிமுறைகள் குறித்து பொது மக்கள் அதிருப்தி கொள்வதுடன்,பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையில் பிளவு ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உணவு பற்றி ஒளிபரப்பிய சம்பந்தப்பட்ட தனியார் தொலைக்காட்சி நிலையம்,பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குறைந்தவிலையுடைய உணவுகள் வழங்கப்படுவதாகவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னரே இந்த நிலை ஏற்பட்டதாகவும தெரிவித்திருந்தது. பாராளுமன்ற சிற்றுண்டிச்சாலை பற்றிய படங்களையும் அது ஒளிபரப்பியதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை,இந்தப் படங்கள் வேறு ஒரு சிற்றுண்டிச்சாலையிலிருந்து எடுக்கப்பட்டவை என்றும், இத்தகைய பொய்யான படங்களை காண்பித்து பிரசாரம் செய்வது கண்டிக்கப்படவேண்டியது எனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும்,பாராளுமன்ற உரிமைகள் குழுவினால் இது தொடர்பாக விசாரிக்கப்படும் என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார். (உ-60,10)

## ஆசிரியர் இடமாற்றம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)


ஆசிரியர்களின் இடமாற்றங்கள் யாவும் பிற்போடப்பட்டிருப்பதாக தமிழர் ஆசியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் 3 ஆம் தவணைக் காலத்தில் இடம் பெற்ற ஆசிரியர் இடமாற்றமானது பாடசாலை மாணவர்களின் 3 ஆம் தவணைப் பரீட்சைகளைப் பாதிப்பதால் இவ்வாறான ஆசிரிய நியமனங்களை எதிர்வரும் 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில், இவ்வாண்டு முதல் இம் மாற்றங்கள் நடைமுறைக்கு வரவுள்ளன. (4,61)

# கறுப்பு யூலை கற்பிக்கும் பாடங்கள்!

-கலி-



இருநூறு ஆண்டுகள் வரை இலங்கையில் நிலை கொண்டிருந்த ஆங்கிலேயர் 1948இல் சிங்கள அரசியல் வாதிகளிடம் ஒரு தலைப்பட்சமாக அதிகாரத்தைக் கையளித்து மாபெரும் வரலாற்று தவறைப்புரிந்தனர். அன்றுதொட்டு தமிழ்த் தேசிய இனத்தை பலவீனப்படுத்த சிங்கள ஆட்சியாளர்கள் எடுத்துக்கொண்ட ஆயுதம், வன்முறை அதன் உச்சக் கட்டம் தான் 1983 யூலைக் கலவரமாகும்.

ஆட்சி புரிந்த அரசாலும், அதிகாரமுற்றவர்களாலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட யூலைக் கலவரத்தின் பாதிப்புக்களில் இருந்து தமிழ் மக்கள் இன்னமும் மீளவில்லை.

சொந்தக் குடிமக்கள் மீது குற்றம் புரிந்த அரசு இருபது வருடமாகியும் அதற்கான பாவ மன்னிப்பைத் தேடிக்கொள்ளவில்லை.

தென்னிலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் அரசால் மிக தவிரமாகத் திட்டமிட்டு நடாத்தப்பட்ட இனப்படுகொலையாகும். தமிழரது சொத்துக்கள் சூறையாடப்பட்டன, எரிக்கப்பட்டன. தென்னிலங்கையில் இருந்து தமிழர்களை முற்றாக வெளியேற்ற அரசு முயற்சித்தது. அனறு நடந்த மிகப்பெரும் துயரமே இன்று நாடு பிளவுண்டு போவதற்குக் காரணமாக அமைந்தன. அதற்குரிய முழுப்பொறுப்பும் ஆட்சியாளர்களைச் சார்ந்திருக்கிறது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இந்த நாட்டில் வாழ்ந்தால் தமது உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பில்லை எனக் கருதி தமது மண்ணைவிட்டு ஏதிலிகளாக அயல்நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர் தமிழர்கள். அது இன்றும் தொடர்கிறது.

அதேவேளை, திருநெல்வேலி சந்தியில் நடைபெற்ற விடு லைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட 13 இராணுவத் தினரது பூதவுடல்கள் 23ஆம் திகதி பிற்பகல் பொறளையில் அடக்கம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

1983 யூலை 23 ஆம் நள்ளிரவு கொழும்பிலிருந்து 6 மைல்கள் தொலைவிலுள்ள திம்பிரிகஸ்யாய நகரில் தமிழரது 10 கடைகள் வன்முறையாளர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அதுவே முதல் தொடக்கம்.

திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதனால் தான் கொழும்பில் கலவரம் வெடித்தது என்று சொன்னால் அதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் 1983 யூலை 20 ஆம் திகதி அரசு செய்தித் தணிக்கையைக் கொண்டு வந்திருந்தது. தமிழர்களுக் கெதிரான வன்முறையின் எதிர் விளைவுகளை வெளியே தெரியாமல் மறைப்பதற்கே அவ்வாறு தணிக்கையைக் கொண்டு வந்தது. நிச்சயமாக திருநெல்வேலி தாக்குதலினால் கலவரம் உண்டாகவில்லை. திட்டமிட்டு தமிழர்களைத் தாக்கி அடிமைப்படுத்துவதற்காக வன்முறைக் கும்பல்களை உருவாக்கி தாக்குதல் நடாத்தத் தயார் நிலையில் அரசு இருந்து வந்து ள்ளது என்பதை அறிய முடிந் தது.

ஆடி பிறந்தால் கொழும்பில் ஆடிவேல் விழா களை கட்டத் தொடங்கிவிடும். கோட் டையில் இருந்து தெஹிவளை வரைக்கும் அது தெரியும். வீதியின் இரு மருங்கும் கரும்புத் தடிகள் கட்டுக் கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கண் கொள்ளாக் காட்சியைக் காணலாம். அந்தக் கரும்புத் தடிகளாலேயே தமிழர்கள் அடித்து நொருக்கி எரியும் நெருப்பில் உயிரோடு போட்டார்கள். திம்பிரிகஸ்யாவில் நள்ளிரவில் தொடங்கிய வன்முறை அதிகாலை விடிந்த போது தென்னிலங்கை எங்கும் பரவியது.

யூலை 24,25 ஆம் திகதிகளில் தமிழர்களது தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், உடமைகள், சூறையாடப் பட்டபோதும், தீ வைக்கப்பட்ட போதும் அதனைத் தடுத்து நிறுத்தவேண்டிய அதிகாரிகளே மௌனமாகப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அதனால் வன்முறையில் ஈடுபட்டோருக்கு அது மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது.

யூலை 25! காலி வீதி ஒரே வாகன நெருக்கடி.. அந்த இடத்தை விட்டகல மணித்தியாலக் கணக்கில் நேரம் எடுத்தன. வந்த வாகனங்களில் தமிழர்கள் இருந்தால் அந்த இடத்திலே வாகனத்தை விட்டு இழுத்தெடுத்து எரியும் நெருப்பில் போட்டார்கள். தமிழருக்குச் சொந்தமாக எது இருந்ததோ அனைத்தும் கொளுத்தப்பட்டன.

23 நள்ளிரவு தொடங்கிய வன்முறை 28ஆம் திகதி நரசிம்மராவ் வரும் வரை அரச தரப்பில் இருந்து வாய் திறக்கவில்லை. அரசுத் தலைவர்களோ அமைச்சரவைச் சகாக்களோ யாரும் தமிழர்கள் மீது கட்ட விழ்த்த வன்முறையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு,அவற்றை நிறுத்துமாறு வேண்டுகோள விடுக்கவில்லை என்பதை இங்கு அனைவரும் கவனத்தில் கொள்வது ஏற்புடையதாகவிருக்கும்.

புதிய மகசீன், வெலிகடை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் கோரமாக கொலை செய்யப்பட்டனர்.

தமிழீழம் மலர்வதை ஆவலுடன் காணக்காத்திருந்த அந்த இளைஞர்களின் கண்கள் தோண்டப்பட்டும், தலைகள் வெட்டிச் சாய்க்கப்பட்டும், கூரிய ஆயுதங்களால் குத்திக் குதறப்பட்டதுமான அந்தக் கோர நிகழ்வு சிறைக் காவலர்களின் அனுசரணையுடன் நடைபெற்றதாக ஆணைக்குழுவே உறுதி செய்துள்ளது.

குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை போன்ற இளைஞர்கள் யூலை 25ஆம் திகதி கொல்லப்பட்டனர். ஏனையோர் 26ஆம் திகதி கொல்லப்பட்டனர். அரசு வன்முறைகளைக் கட்டுப் பாட்டிற்குக் கொண்டுவர எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதற்கு 26ஆம் திகதி நடைபெற்ற சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளின் படுகொலை எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

தென்னிலங்கை மற்றும் மலையகப் பகுதியெங்கும் தமிழர்கள் அடித்து நொருக்கப்பட்டும், உயிரோடு எரிக்கப்பட்டும், உடமைகளை இழந்து, உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி ஆலயங்களில் தஞ்சம் புகநேர்ந்த போதும், வன்முறைகளைக் காடைத் தனத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு எந்தவொரு நடவடிக்கை எடுப்பதையும் அரசு முற்று முழுதாக புறக்கணித்தது. பெரும் அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியது. ஆயினும் ஆலயங்கள், பொது இடங்களில் தஞ்சமடைந்தவர்களைக் கூட வன்முறையாளர்கள் கோரத்தனமாகத் தாக்கினார்கள்.

1948 இல் மலையக மக்களின நாட்டுரிமையை பறித்தார்கள். 1958 இல் தமிழர்களின் மொழியுரிமையைப் பறித்தார்கள். இலங்கை ஒரு பல்லின பன்மைத்துவ சமூக நாடு என்பதை மறந்து இலங்கையைப் பௌத்த சிங்கள நாடாக மாற்ற டி.எஸ்.சேனநாயக்க முதல் சந்திரிகா அம்மையார் வரை விடாப்பிடியாகவுள்ளனனர்.

1983 இல் ஜே.ஆர்.விட்ட மாபெரும் தவறு ஆயுதப் போராட்டத்தைத் தீவிரமாக்கியது. தென்னிலங்கையில் எந்தவொரு அரசியல் சக்திகளும் தமிழ் மக்களின் நியாய பூர்வ மான அரசியல் அபிலாசைகளுக்குத் தீனிபோட முயற்சி எடுக்கவில்லை. தமிழ் மக்களின் உரிமைக்காக 1940 களில் குரல் கொடுத்து வந்த என்.எம்.பெரேரா, பீட்டர், கென மன் போன்றோர் அறுபதுவரை அதனைச் செய்தனர். 1950 களில் குரல் கொடுத்த கொல்வின் ஆர்.டி.சில்வா போன்றோரும், 1970களில் சிறிமாவோ அம்மையாருடன் கைகோர்த்து இடதுசாரிக் கொள்கைகளையும் தமிழர் உரிமைக்கான குரலையும் குழிதோண்டிப் புதைத்தனர்.

இன்று வாசுதேவநாணயக்கார, கலாநிதி விக்கிரமபாகு, கருணாரட்ணா போன்றவர்கள் தமிழ் மக்களது அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், சிங்களப் பேரினவாத சக்திகளின் கைமேலோங்கியிருப்பதால் இவர்களது கருத்துக்கள் அமுங்கிப் போகின்றன.

யூலை கலவரத்தால் கொழும்பு கறுப்பாகி இருண்டது. எங்கும் அச்சம், பீதி நிலவியது. அடுத்து என்ன நடக்கும் என்ற பீதி அனைவரையும் வாட்டியது.

இந்திய வானொலிகளில் அந்தச் செய்தி வெளியான போது, அநேக தமிழர்களின் மத்தியில் ஒருவித ஆறுதலைக் கொடுத்தது.

அப்போது இந்திராகாந்தி பிரதமராக இருந்தார். இலங்கை அரசு வன்முறைகளை உடன்நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். போதிய உதவிகள் வழங்கப்படும். இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பி.வி.நரசிம்மராவ் கொழும்பு விஜயம் என செய்தி வெளியானவுடன் கலவரம் அடங்கியது எனலாம். அதற்குக் காரணம் தமிழர்கள் தாக் கப்படுவதால் இந்தியாவின் கோபத்துக்கு ஆளாகநேரிடும் என்ற அச்சம் அல்லது திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஆபத்து நேரலாம் என அஞ்சியே வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதை அரசு தடுக்க விளைந்தது எனக் கூறப்படுகிறது.

1983 ல் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜெவர்த்தனா பதவியேற்றவுடன் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதென முடிவு செய்தார்.

தமிழர் தமது தாயகத்தில் அச்சமின்றி சுதந்திரமாக, பாதுகாப்பாக வாழ வேண்டுமானால் அதற்கான ஒரேவழி தமிழீழம் தான் என்பதை 1977 பொதுத்தேர்தல் மூலம் தெரிவித்திருந்தார்கள். தமிழ் மக்களின் எழுச்சி சிங்களப்படை கள் மீதிருந்த ஆத்திரம் காரணமாக தமிழீழ தனி அரசை நிறுவ விடுதலைப் போராட்டத்தை முழு வீச்சாக தமிழ் மக்கள் ஆதரித்தார்கள்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாச, அத்துலக் முதலி போன்ற தலைவர்கள் தமிழ் மக்களை பயமுறுத்தி அடிபணிய வைக்கும் முயற்சியில் இறங்கினர். எவ்வளவு தூரம் தமிழினப் படுகொலைகளை மேற்கொள்ள முடியுமோ, எவ்வளவு உடைமைகளை நாசமாக்க முடியுமோ அவ்வளவு கால அவகாசத்தை 83 ல் ஏற்பட்ட கலவரத்திற்கு வழங்கினார்கள்.ஆனால் நடந்தது வேறு.


ஜே.ஆரின் கனவுகள் நிறைவேறவில்லை. தமிழர்களை அடிப்பணிய வைக்க முடியவில்லை,தென்னிலங்கையில் தமிழர்களின் தொழிற்பாடுகளை கட்டுப்படுத்த முடியவில்லை. தமிழர்கள் அஞ்சி, நடுங்கி தனது காலடியில் விழுவார்கள் என எதிர்பார்த்தார். ஆனால் ஆயுதப் போராட்டம் அபரிமித வளர்ச்சி பெற்றது.

தமிழ் தேசிய இனத்தின் எழுச்சியும், விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியும் 83 கலவரத்திற்கு பின் ஏற்பட்டது எனக்கூறலாம்.

தமிழர்களுடைய வாழ்வை வேரோடு பிடுங்கி ஏறிய சிங்கள ஆட்சியாளர்கள் முற்பட்ட போதும் இதில் முற்று முழுதாக தோற்றுவிட்டனர்.

தமிழரது மனங்களின் ஆழமான பதிவை ஏற்படுத்திய யூலைக் கலவரம் தமிழ் தேசியத்தின் எழுச்சிக்கு வித்திட்டுள்ளது. இன்று விடுதலைப் போராட்டம் உச்சநிலை அடைந்து. தமிழர்கள் தமக்கென தனியரசை அமைக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளனர் என்பது யதார்த்தமாகிவிட்டது.

தாயகக் கோட்பாட்டை நிலை நிறுத்தும் நிலம், மொழி, படை, கலை, பணபாடு, பொருண்மியம் உடைய இனமாக இன்று தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள். இவற்றை வழி நடத்த மாபெரும் தலைவனாக மேதகு. வே.பிரபாகரன் தோன்றியுள்ளளார். ஆதலால் சிங்கள ஆட்சியாளர்கள் இனி ஒரு கலவரத்தைத் தொடங்க மாட்டார்கள் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.



ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா

## ஜூலைக் கலவரத்தில்

# உயிரிழந்தோர்க்காக இந்து மதபீடம் பிரார்த்தனை

(கொழும்பு)

தமிழர்களின் யுத்த வரலாற்றில் 83 இல் மரணித்தவர்கள் கூட இந்த யுத்த வரலாற்றில் உள்ளடக்கப்படவேண்டியவர்கள். இவர்களது மரணம் வடகிழக்கில் இன்றைய ஆயுதப் போராட்டத்திற்கு அத்திவாரமிடப்பட்டதும் அல்லாமல் பல விடுதலை இயக்கங்கள் தோன்றுவதற்கும் வித்திட்டது. இந்த அவலச் சாவடைந்த தமிழ் மக்களின் ஆன்மாவின் சாந்திக்கு இலங்கை முழுவதிலுள்ள ஆலயங்களில் ஆத்ம சாந்தி பிரார்த்தனை செய்வோம்.

ஸ்ரீ வித்யா சர்வதேச இந்து மத பீடம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும்,

1983 ஜூலை 23 ஆம் திகதி தமிழ் மக்களின் மனதைவிட்டு அகலாத கறைபடிந்த துக்கநாளாகும். ஒரே நாளில் தமிழ் சமூகத்தை நடு வதியில் கொண்டு வரச் செய்த இனவிரோதிகளின் கொடூரமான செயலுக்குரிய நாள் சொத்து, சொந்தம், சுற்றம் அனைத்தையும் பறிகொடுத்து நிர்க்கதியடைந்த நாள்.

இன்று, வடகிழக்கு தனியலகு ஆட்சி அதிகாரம் கேட்கும் அளவுக்கு அத்திபாரமிடப்பட்ட பரிதாபமாக உயிரிழந்த தியாகிகளின் நினைவு நாள். அவர்கள் அன்று கொடுத்த உயிர்ப்பலி தான இளைஞர்களை ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கான, மனதில் உந்துதலுக்கான சக்தியாக அமைந்தது எனக் குறிப்பிட்டுள்ளது. (உ)

## யாழ்.பல்கலைக்கழகத்தின்

# வவுனியா வளாகத்தை தனியான பல்கலைக்கழகமாக்க இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தினைத் தனியான வன்னிமாவட்டப் பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கல்வி உயர்கல்வி பிரதி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்துக் கலந்துரையாடியதனைத் தொடர்ந்தே இதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

வன்னிமாவட்டங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் நலன் கருதியே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் துணை வேந்தர்கள் ஆகியோர் விரைவில் கூடி ஆராயவுள்ளனர். (4,62,64)


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2004.08.05, பி.ப.2.00மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 2004.08.06, ந.ப.12.00மணிவரை.

கேள்விப் பத்திரம் திறந்துபார்க்கப்படும் திகதி : 2004.08.06, பி.ப.3.00மணி.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணம் (வற் உட்பட) |
|---|---|---|
| கொத்தியாலடி குப்பை கொட்டும களத்தைச்சூழ முட்கம்பிவேலி அமைத்தல் (மயானம் உள்ளடங்கலாக) | 7000.00 | 575.00 |

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் மூலப் பிரதி "செயலாளர்" வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் என்ற முகவரிக்கும், அதன் பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்", உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரியகாலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபுறமேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
2004.07.22.

திருமதி.ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.


# சென்னையில் கொள்ளையர் அட்டகாசம் மகள் கொலை, பெற்றோர் காயம்

(சென்னை)

சென்னையை அடுத்துள்ள ஸ்ரீ பெரும் புதூரில் வீட்டில் இருந்தவர்களை அடித்துப் போட்டுவிட்டு பிளஸ் 2 படிக்கும் மாணவியின் கழுத்தை நெரித்துக்கொன்று 50 சவரன் தங்க நகைகளை முகமூடிக் கொள்ளையர்கள் அள்ளிச் சென்றுள்ளனர்.

காவல்துறை சோதனைச் சாவடிக்கு மிக அண்மையிலுள்ள வீட்டில் நடை பெற்ற இக் கொளளைச் சம்பவம் அப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையை அடுத்துள்ள ஸ்ரீ பெரும் புதூர் செல்லப் பெருமாள் தெருவில் காவல்துறை சோதனைச் சாவடி ஒன்றுள்ளது. இதன் பின்புறம் குடிநீர்வாரிய ஒப்பந்தக் காரர் ஜெயச்சந்திரன் என்பவரது வீடு இருக்கிறது.

நேற்றுமுன்தினம் அதிகாலை நாய் குரைப்பதைக் கேட்டு வெளியே வந்த ஜெயச்சந்திரனை இருட்டில் பதுங்கியிருந்த முகமூடிக் கொள்ளையர்கள் உருட்டுக் கட்டையால் அடித்துத் தள்ளினார்கள்.

பின்னர் ஜெயச்சந்திரனின் மனைவி, மகள், மாமனார் ஆகியோரையும் தாக்கினார்கள். இதைத் தொடர்ந்து ஜெயச்சந்திரனின் மகளும் பிளஸ் 2 வகுப்பில் படிப்பவருமாகிய பவித்திராவை கழுத்தை நொித்துக் கொலை செய்துள்ளனர்.

அனைவரையும் தாக்கி வீழ்த்தி விட்டு, மாணவியையும் கொலை செய்த பின்னர் வீட்டிலிருந்த 50 சவரன் நகைகள், 27 ஆயிரம் ரூபா ரொக்கம் உள்ளிட்டவற்றை அள்ளிக்கொண்ட கொள்ளையர்கள் வெளியில் தயாராகவிருந்த காரில் ஏறிச் சென்றுவிட்டனர்.

இதனிடையே நேற்று முன் தினம் அதிகாலை வரை 10 இடங்களில் சூறையாடிய கொள்ளையர்கள் கடைசியாக மாதவரத்தில் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

லியோ என்ற மத்திய அரசு அதிகாரியின் வீட்டுக் கதவை உடைத்து தங்க நகைகள் உட்படப் பல்வேறு பொருட்களை அள்ளிச் சென்றுள்ளனர்.

மேலும் சென்னை சௌகார் பேட்டையில் நகைக் கடையொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்து சுமார் 20 இலட்ச ரூபா ரொக்கப்பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.(து)



ஜெர்மன் வெளிவிவகாரத்துறை அமைச்சரும் துணை வேந்தருமான ஜோஸ்க்கா பிஷர் நேற்று முன்தினம் சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்துப் பேசினார்.

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தி.மு.க. தலா 25 ஆயிரம் நிதியுதவி

(கும்பகோணம்)

கும்பகோணம் தீ விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்தினரைத் தி.மு.க.தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

பலியான மற்றும் தீக்காயம் அடைந்த 112 குழந்ததைகளுக்கு தி.மு.க.சார்பில் 28 இலட்சம் ரூபா உதவித் தொகையை அவர் வழங்கினார்.

கும்பகோணத்துக்கு நேற்று முன்தினம் வந்த கருணாநிதி பள்ளிக் கூடத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 22 குழந்தைகளை நேரில் சந்தித்தார்.

ஒவ்வொரு குழந்தையிடமும் சென்று அவர் ஆறுதல் கூறினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த 22 குழந்தைகளும் விரைவில் நலம் பெறுவார்கள் என்று மருத்துவர்கள் கூறியதாகத் தெரிவித்தார்.

எந்தப் பள்ளிக் கூடமானாலும் நல்ல சூழலில் அமையவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

இதையடுத்து ராஜா மஹால் என்ற மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தீ விபத்தில் பலியான மற்றும் காயமடைந்த 112 குழந்தைகளின் குடும்பங்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 28 இலட்சம் ரூபா உதவி வழங்கினார். (து)

# மாணவர்களைக் கடத்திய மாயமான மர்ம மங்கை

(சென்னை)

சென்னையில் மாநகராட்சிப் பள்ளியில் படிக்கும் 5 மாணவிகள் உட்பட 9 பேர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு அண்ணா நகரிலுள்ள மாநகராட்சிப் பள்ளியொன்றில் 500க்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்துவருகிறார்கள்.

நேற்று முன்தினம் காலை 7மணியளவில் பள்ளிக்குவந்த 5 மாணவிகளையும் 4 மாணவர்களையும் இரண்டு ஓட்டோக்களில் ஒரு பெண் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்டவர்களில அழகு என்ற மாணவி தப்பி வந்து கடததப்பட்ட செய்தியைப் பள்ளியில் தெரிவித்தார்.

தகவலறிந்த மாணவர்களின் பெற்றோர் திரண்டுவந்து பள்ளியை முற்றுகையிட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தனிப்படை அமைத்துப் பொலிஸார் மாணவர்களை வெளியூர்களிலும் தேடி வருகிறார்கள். (து)

## இந்தியச் செய்திகள்

# கைகலப்பு ஏற்படும் நிலையில் மக்களவை ஒத்திவைப்பு

(டில்லி)

கொலை வழக்கில் பொலிஸ் தேடும் மத்திய அமைச்சர் சிபு சோரனை ஆஜர்படுத்தவும் பதவி விலக்கவும் கோரி தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பெரும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் சிவசேனா, ராஷ்ட்ர ஜனதாதள் உறுப்பினர்களிடையே கைகலப்பு ஏற்டும் சூழல உருவானதால் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று முன்தினம் காலை, மக்களவை கூடியதும் கொலை வழக்கில் கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டதையடுத்து மத்திய அமைச்சர் சிபுசோரன் தலை மறைவாகியுள்ள பிரச்சினையை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எழுப்பினர். அப்போது எதிர்க் கட்சித் தலைவர் அத்வானி பேசுவதற்குச் சபாநாயகர் அனுமதியளித்தார்.

அத்வானியின் பேச்சுக்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் இரு தரப்பினருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.


இதையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகர் இருக்கையருகே சென்று கூச்சல், குழப்பத்தில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டதைப் பொருட்படுத்தாது சபாநாயகர் தொடர்ந்து சபையை நடத்தினார்.

பின்னர் ஒத்திவைக்கப்பட்ட அவை 12 மணிக்குக் கூடிய போது சிவசேனா உறுப்பினர்கள் சிலர் ஆட்சேபகரமான வார்த்தைகளைக் கூறினார்கள். அவர்களை நோக்கி ராஷ்ட்ரிய ஜனதாதள் உறுப்பினர்கள் பாய்ந்ததால் சபையில் பதற்றம் ஏற்பட்டது. இதனால் மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. (து)

# இலகுவாசிப்புக்கு உதவும் நூல்

## சிறிஸ்கந்தராசாவின் 'பல்சுவைக்கதம்பம்'

இன்றைய உலகம் தகவல் மயமானது. தகவல் தொடர்பியல், தகவல் தொழில்நுட்பம் என்பன உலகின் தாக்கம் மிக்க இரு




துறைகளாக வளர்ச்சி கண்டுள்ளன. உலகம் ஒரு கிராமமாக **(Global Village)** மாறிவிட்டது. உலகமயமாக்கல எண்ணக்கருவே இன்றைய உலக ஒழுங்கை மாற்றியமைத்து வருகிறது. இந்தப் பின்னணியில் தகவல் சார்ந்த விடயங்கள் முதன்மைப்பட்டு வருகின்றது.

அறிவே இன்றைய தேவைப்பாடு அறிவு சார்ந்த துறைகளே இன்று முதன்மைத் துறைகளாக மாறியுள்ளன. எனவேதான், பொது அறிவு, பொது விழிப்பு என்பன கல்வியியலில் முதன்மை பெற்றுள்ளன. போட்டிப் பரீட்சைகளுக்கு மட்டுமன்றி, பொதுவான கல்வியிலும் பொது அறிவுக்கு முதன்மை தரப்படுகிறது. க.பொ.த.உயர்தரம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி ஆகியவற்றில் பொது அறிவுத் தேடலை ஊக்குவிக்கும் நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழில் பொது அறிவு சார்ந்த நூல்கள் அண்மைக்காலத்தில் அதிகம் வரத் தொடங்கியுள்ளன. எனினும், அவை வெறுமனே சிறு சிறு தகவல்களை வினாவிடை விடிவில் முன்வைப்பனவாகவே உள்ளன. தமிழகத்தில் அநுராகம் வெளியீடுகள் குறித்த ஒரு விடயம் தொடர்பான ஓரளவு முழுமை

யான தகவல்களை வழங்கும் விதத்தில் சிறு சிறு பிரசுரங்களை வெளியிட்டு வருகின்றன. அன்றியும், கலைக்களஞ்சியங்கள் ஓரளவு விடயச் சுருக்கத்தோடு குறித்த விடயம் தொடர்பான தகவல்களையும் வழங்குகின்றன.

பட்டு வெளியிடப்பட்ட தகவல்களே உதாரணமாக,

❖ திருக்குறளில் ஆயிரத்து 705 முறை பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்து 'ன்'

❖ ஆங்கில எழுத்துக்களில் மிகக் கூடுதலாக **E** யும், மிகக்

**நூல்:- பல்சுவைக் கதம்பம்**
**ஆசிரியர் :- சி.சிறிஸ்கந்தராசா**
**விலை :- ரூ 125/=**

இலங்கையில் தமிழில் வெளிவரும் பொது அறிவு நூல்கள் போட்டிப் பரீட்சைகளை மையமாகக் கொண்டவை. அவற்றில் பல ஒரே மாதிரியானவை; தகவற் பிழைகளையும் முரண்களையும் கொண்டவை. அந்த வகையில் இ.சிறிஸ்கந்தராசாவினால் எழுதப்பட்டு வெளிவந்துள்ள நூல் பல்

குறைவாக **Q**வும் பயன்படுத்தப் படுகிறது.

❖ ஒன், டு, த்ரீ என்று ஆங்கிலத்தில் 99 வரை எழுதினால் **A,B,C,D** என்ற எழுத்துக்கள் வரமாட்டாது.

இப்படிப் பலவற்றைத் தனது 'ஆய்வு' மூலமாகச் செய்துள்ளார். ஏனைய நூல்களைப் போலவே,

## திறனாய்வுக்களம்

சுவைக் கதம்பம்.

திருக்குறளில் பற்றுக் கொண்ட அவர் ஆயிரத்து 330 பல்சுவைத் தகவல்களை, புதுமையான செய்திகளை இந்தத் தொகுப்பில் தந்துள்ளார். இந்நூலை எழுதுவது ஒரு வகையில் சுலபமானது. ஏனெனில், விடயக் கையாளுகைக்கு வரையறைகள் ஏதுமில்லாதிருப்பது. மறு வகையில் கடினமானது. ஏனெனில், நூலிலுள்ள விடயங்களைப் பெறுவதற்கு அவர் மேற்கொண்டிருக்கக் கூடிய தேடலும் ஆய்வும் சுலபமானதல்ல.

இந்நூலில் ஆசிரியர் தொடாத பரப்பு இல்லை. அரசியல், மொழியியல், கணிதம், இலக்கியம், சினிமா, வரலாறு, பொருளாதாரம், புவியியல் என எல்லாவகையான பரப்பிலும் ஊடறுத்து உள்நுழைந்துள்ளார் நூலாசிரியர்.

உண்மையில் நூலிலுள்ள கணிசமான விடயங்கள் நூலாசிரியரால் ஆய்வுக்கு உட்படுத்தப்

சிறு சிறு துணுக்குகளை இந்நூலும் தருகின்றது. ஒரு துறை சார்ந்த, விடயம் சார்ந்து பார்ப்பவனுக்கு இந்நூல் பயன்படாது. பொது அறிவு சார்ந்த - பலரும் அறியாத புதுமைத் தகவல்களை வழங்கும் இந் நூல் இலகு வாசிப்புக்குப் பொருத்தமானதாகும்.கூடு

**இயல்வாணன்**

தலாக தமிழகச் சொற்பாதிப்பை இந்நூலில் காணலாம். ஒன் (**one** - வண்), ஆல்புமென், வின்ஸ்டர் சர்சசில், காலண்டர் என ஆங்கிலத்தைத் தமிழகத்தில் உச்சரிப்பது நூலாசிரியரால் கையாளப்பட்டுள்ளது. இது தவிர்க்கப்பட்டு இருக்கலாம். சில தகவற் பிழைகளையுந்தான்.

ஏலவே நான்கு நூல்ளைத் தந்துள்ள அவர், இவ்வாறான இலகு வாசிப்புக்கு உதவக் கூடிய நூல்களைத் தருவதன் மூலம் இளஞ் சந்ததியிடத்து பயனுள்ள தகவல்களை விதைக்கும் நல்ல பணியை ஆற்றுபவராகிறார். □

# முன்பள்ளிச் சிறார்களுக்கு சுகாதாரப் பொதிகள்

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள பிரான் பற்று, வடலியடைப்பு பகுதிகளில் மிகவும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 75 முன்பள்ளிச் சிறுவர்களிற்கும், தாய்மார்களிற்கும் உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி சுகாதாரப் பொதிகளை வழங்குவதற்கு பிரதேசசபையின் செயலாளர் பி.விகடர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சுக்கமைவாக மேற்படி சிறுவர்களில் பற்சூத்தை அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டதை அடுத்தே இவர்களிற்கு பற்தூரிகை, பற்பசை, சவறகாரங்கள அடங்கிய பொதிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

மேற்படி நிகழ்வானது எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் செயலாளர் பி.விக்டர் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உளளூராட்சி ஆணையாளர் கே.இராசையாவும் கலந்துகொள்ளவுள்ளார். (உ-252)

## சுந்தரர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினால் நடத்தப்பட்டுவரும் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை வரிசையில், நாளை ஞாயிற்றுக்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை கல்லூரியின் சோமாஸ்கந்தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இத்திருநாள் தொடர்பானசிறப்பு நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட் கிழமை காலை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இந்து மன்றத் தலைவர் கு.ஸ்ரீசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளன. இதில் யாழ்ப்பாணக்கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேலுவின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (18)

✪ ✪ ✪

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு நல்லை சட்டநாதர் தேவஸ்தானத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழா கொண்டாடப்படவுள்ளது.

ஆலயப் பூஜையைத் தொடர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அபிஷேக வழிபாடுகள் நடைபெற்று சுந்தரர் தேவாரப் பாடல்கள் பாராயணமும் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளன. (18)

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் சிறப்பு மலர் வெளியீட்டு விழாவும் இன்று சனிக் கிழமை நடைபெறவுள்ளன. (18)

## கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடாத்தும் 82 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா இன்று சனிக் கிழமை மு.ப.10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகச்பாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக தமிழீழ நிர்வாக சேவை யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன், கொழும்பு தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் ப.றணவக்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் அரையாண்டு முறையிலான பரீட்சைக்கு முற்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான மீள் பரீட்சை நடைபெற உள்ளதால் அரையாண்டுப் பரீட்சை முறைக்கு முன் பயிற்சி நெறியினை பயின்று மீள்பரீட்சை எடுக்கவேண்டிய மாணவர்கள் உடனடியாக நிறுவன அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர் த.இராஜரட்ணம் கேட்டுக்கொண்டுள்ளார். (உ)

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணையும் சாத்தியம்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்துடன் இணைவது உறுதியாகிவிட்டதென தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி நேற்று முன்தினம் காலையும், பிற்பகலும் இடம்பெற்ற அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்புக்கள் வெற்றியளித்துள்ளதாகவும் நேற்று முன்தினம் இரவு மூன்றாவது சுற்றுப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றதாகவும் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

மத்திய மாகாண சபையின் கல்வியமைச்சுப் பதவியும் ஒரு போனஸ் ஆசனம் மற்றும் அமைச்சுப் பொறுப்புக்களுக்குச் சமமான இரண்டு பதவிகளும் 2 பிரதி அமைசசுப் பதவிகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது ஆடிமாதம் என்பதால் தற்போதைக்கு காங்கிரஸ் அரசுடன் இணையாது எனவும் இரண்டு வாரங்களுக்கு வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளவுள்ள கட்சியின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், நாடு திரும்பியதும் உத்தியோக பூர்வமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அரசுடன் இணையுமெனவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (121)

# இலங்கைக்கு யுத்தக் கப்பல் வழங்க இந்தியா இணக்கம்

## அமைச்சர் அனுர திஸநாயக்க தெரிவிப்பு

இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பாக இந்தியா விசேட கவனம் செலுத்தி வருவதாகவும், இலங்கையின் தேவைக்கு யுத்தக் கப்பல் ஒன்றை வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் அனுர திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்தராஜபக்ஷவுடன் இந்தியா சென்று திரும்பிய அமைச்சர் அனுர திஸநாயக்க கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இநதிய விஜயம் குறித்து அமைசசர் கருத்து வெளியிடுகையில்,

பலாலியில் உள்ள விமானத் தளத்தை இலவசமாக புனரமைத்துக் கொடுப்பதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்திருப்பதுடன், இலங்கையில் உள்ள முக்கிய பிரமுகர்களின் பாதுபாப்புத் தொடர்பான ஆலோசனைகளையும் அதற்குரிய பயிற்சிகளையும் வழங்குவதற்கு இத்தியா தயாராகவுள்ளது.

கொழும்புக்கும் கொச்சினுக்குமிடையே பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்துவதற்கு இந்தியா தயாராக உள்ளது. கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையே போக்குவரத்து சேவையை நடத்த கடந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போதும் தமிழ்நாட்டு அரசு எதிர்ப்பால் அது கைகூடவில்லை. ஆனால் கொழும்புக்கும் கொச்சினுக்குமிடையே பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு கொச்சின் கேரள மாநிலத்தில் இருப்பதால் எதிர்ப்பு நடவடிக்கைளைத் தமிழ்நாடு அரசு எடுக்கமாட்டாது என்றும் அமைச்சர் அனுர திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

(ம-121)

# உப்பு மணலையும் நல்ல மணலையும் கலந்து பயன்படுத்துவது குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

கட்டடநிர்மாண வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படும் மணலுடன் கடலின் உப்பு மணலையும் கலந்து பயன்படுத்துவது தொடர்பாக ஆராயப்படுகிறது.

அதாவது, பசைத்தன்மை குறைந்த கடலின் உப்புமணலை எடுத்துக் கழுவி அதனை சாதாரண மணலுடன் சரிசமமான முறையில் கலந்து கட்ட வேலைகளுக்குப்பயன படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராயப்பட்டுவருகிறது.

இந்த அடிப்படையில் கடலில் இருந்து பெறப்படும் உப்பு மணலினை விநியோகம் செய்வதற்கு தனியார் துறையினருக்கு காணித் துறை பணியகம் அழைப்புவிடுத்துள்ளது.

இந்தத்திட்டம் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாகவும் இது நடைமுறைக்கு வருவதன் மூலம் மணல் அகழ்வதால் ஏற்படும் சூழல் பிரச்சினைகள் கட்டுப்படுத்தப்படும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது. (உ-4,61)

# தொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதில் புதிய நடைமுறை

(கொழும்பு)

தொழிலாளர்களுக்கு நட்ட ஈடு வழங்குவது தொடர்பில் புதிய முறை ஒன்றை அமுல் படுத்த தொழில் ஆலோசனைச்சபை தீர் மானித்திருக்கிறது.

சுபவிருப்பில் ஓய்வு பெறுபவர்களுக்கும் வயது எல்லை முடிந்தபின் ஓய்வு பெறுபவர்களுக்கும் நட்ட ஈடுவழங்க முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த இந்த விதி இரத்துச் செய்யப்படவுள்ளது.

இதுகுறித்து அமைச்சர் அதாவுட செனிவிரட்ண தலைமையிலான குழுவினர் நவடிக்கைகளை மேற்கொண்டுவிருகின்றனர். (உ-4,62)

## சமூகக்கல்வி போட்டியில் மாற்றம்

(தனங்கிளப்பு)

கோபபாய்க் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நாளை ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடாத்தப்படவிருந்த சமூகக்கல்வி போட்டிகள் அனைத்தும் அன்று நடைபெறமாட்டாதெனவும் அவை, நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப. 1.00 மணிக்கு நடைபெறுமெனவும் கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சிவஞானசுந்தரம் தெரிவித்துள்ளார். (37)

# மக்களுக்கான குடிநீர் சேவையில் யாழ்.மாநகர சபையின் மவுசு

யாழ்ப்பாண மாநகர சபையினால் பொதுமக்களுக்கென வழங்கப்பட்டு வரும் முக்கிய சேவைகளுள் குடிநீர் விநியோகமும் ஒன்றாகும். இச்சேவையில் பாரிய குடிநீர் விநியோகத் திட்டங்களும், சிறிய குடிநீர் விநியோகத் திட்டங்களும் உள்ளடக்கப்படுகின்றன. பாரிய குடிநீர் விநியோகத் திட்டத்தில் கோண்டாவில் பம்நிலையமும், மெயின் வீதி பிரதானத் தாங்கியும், திருநெல்வேலி பம்நிலையமும், குருநகர் தாங்கியும் சேர்க்கப்பட்டுள்ளன.

04 கிணறுகளைக் கொண்ட குடிநீர் விநியோக நிலையமொன்று 1962 ஆம் ஆண்டு கோண்டாவிலில் உருவாக்கப்பட்டது. இவற்றின் நடுவில் ஒரு கிணறும், அதிலிருந்து சமதூரத்தில் 03 கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மூன்று கிணறுகளும் நடுவிலுள்ள ஆழமான கிணற்றிற்கு சுரங்கப் பாதையூடாகத் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. நடுவிலுள்ள கிணற்றிலிருந்து நீரிறைப்பு இடம் பெறும் சமயங்களில் மற்றைய 03 கிணறுகளிலிருந்தும் குடிநீர் நடுவிலுள்ள கிணற்றிற்கு வரக் கூடியவாறு சுரங்கப்பாதை வடிகமைக்கப்பட்டிருப்பது. சிறப்பான தொரு அம்சமாகும்.

கோண்டாவில் குடிநீர் விநியோக நிலையத்திலிருந்து பிரதான தாங்கிக்கு குடிநீர் பாய்ச்சப்படுகிறது. இப்பிரதான தாங்கி 1963 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் உயரமும், கனவளவும் முறையே 40 மீற்றர், 560 கன மீற்றர் ஆகும். கோண்டாவில் குடிநீர் விநியோக நிலையத்திலிருந்து பலாலி வீதியினூடாக 300 விட்டமும் 06 கிலோ மீற்றர் நீளமுமுடைய பிரதான குழாய் மூலமாக பிரதான வீதியிலுள்ள தாங்கிக்கு நீரேற்றப்படுகிறது. இக்குடிநீர் 650 பொது நீர்க் கம்பங்கள் மூலமும் 250 தனியார் விநியோக இணைப்புக்கள் மூலமும் பயன்படுத்தப்படுகிறது. இம்முறையான விநியோகத்தின் மூலம் ஏறத்தாழ 35,000 மக்கள் போதியளவு பயனடைகிறார்கள்.

திருநெல்வேலி குடிநீர் விநியோக நிலையம், இரண்டு கிணறுகளுடன் கடந்த 1952 ஆம் ஆண்டு முதல் செயற்படத் தொடங்கியது. அதே காலப்பகுதியில் தான் குருநகர் குடிநீர்த் தாங்கியும் கட்டி முடிக்கப்பட்டது. இத்தாங்கிக்கு 110 கன மீற்றர் கனவளவுள்ள விநியோக நிலையத்திலிருந்து பலாலி வீதியூடாக 150 மில்லிமீற்றர் விட்டமும் 05 கிலோ மீற்றர் நிளமுள்ள வேறு விநியோகக் குழாய் மூலம் நீரேற்றப்படுகிறது. காலையும், மாலையும், ஒவ்வொரு மணித்தியாலம் 70 பொது நர்க் கமகள் மூலமும், 50 வரையான தனியார் இணைப்புக்கள் மூலமும் ஏறத்தாழ 10,ஆயிரம் மக்கள் குடிநீரைப் பெற்றுப் பயன்படுத்திவருகின்றனர். அத்தோடு இவ விநியோக நிலையத்திலிருந்து குடிநீர்த் தேவைக்காக மட்டும் யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள தாங்கிக்கு தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

1972 ஆம் ஆண்டிலே 45 கன மீற்றர் கனவளவுள்ள குடிநீர்த் தாங்கியொன்று நவீன சந்தையினுள் நிர்மாணிக்கப்பட்டது. அங்குள்ள குழாய்க் கிணற்றிலிருந்து இத்தாங்கிக்கு நீரேற்றப்பட்டு, பஸ் தரிப்பு நிலையம், நவீன சந்தை மற்றும் போதனா வைத்தியசாலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 10 க்கும் மேற்பட்ட பொதுநீர்க் கம்பங்கள் மூலமாக காலை, மாலை மற்றும் பகல் நேரங்களில் யாழ்.நகருக்கு வருகைதரும் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டுவருகிறது. அத்தாங்கிக்கு திருநெல்வேலி குடிநீர் விநியோக நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யக்கூடிய பிரதியேகமான அமைப்பு ஒன்றும் உள்ளது.

யாழ்.மாநகர சபையின் சிறிய நீர்விநியோகத் திட்டத்தில் நாயன் மார்க்கட்டு தாங்கி, சட்டநாதர் கோவில் தாங்கி, கச்சேரி நல்லூர் வீதி தாங்கி மற்றும் கொழும்புத் துறை தாங்கி ஆகியவை அடங்குகின்றன. இச்சிறிய திட்டங்களின் மூலம் ஏறத்தாழ 12,000 மக்கள் குடிநீரைப் பெற்றுப் பயனடைகின்றனர்.

பின்னர் 1997 ஆம் ஆண்டு மாநகர சபையின் குடிநீர் விநியோகத் திட்டத்தைப் புனரமைத்து மீள்விக்கும் வேலைகளை ஜி.ரி.சற் நிறுவனம் பொறுப்பேற்று செயற்படுத்தியதன் மூலம் உடைந்த பாரிய நீர்விநியோகக் குழாய்கள், புதிய பொது நீர்க் கம்பங்கள், பாரிய மின்பிறப்பாக்கிகள், புதிய நீரேற்றும் பம்பிகள் மற்றும் தேவையான உபகரணங்கள், 06 பவுசர்கள், 05 டிராக்டர்கள், 02 ஈழுவைப் பெட்டிகள் போன்றவை மாநகர சபைக்கு வழங்கப்பட்டு, நீர்விநியோகத்தை சீராக்கி மீண்டும் நடைபெற வழியேற்பட்டது.

உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டத்தை தொனிப் பொருளாகக் கொண்டு பின்வரும் செயற்றிட்டங்கள் மக்களுக்காக முன்னெடுக்கப்படவுள்ளன:

♠ மாநகர சபையின் குடிநீர் விநியோகத் திட்டத்தினைப் பொறுத்த வரையில் முக்கியம் பெறும் குடிநீர்க் கம்பங்ககள் 300 க்கும் மேற்பட்டவை திருத்தம் செய்யப்பட்டு, வர்ணம் தீடடப்படவுள்ளன:

♠ குடிநீர்க் கம்பங்களில் பொருத்தப்பட்டு பழுதடைந்துள்ள நீ வரும் குழாய்கள் அவ்வப் பகுதி பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களினால் இனங் காணப்பட்ட 50க்கும் மேற்பட்டவை புதிதாக மாற்றப்படுகின்றன:

♠ ஏற்கனவே தத்தமது வதிவிடங்களுக்கு குடிநீரிணைப்புக்களைப் பெற்றிருந்தவர்களுக்கு துரிதகதியில் மீளிணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது:

♠ பொது குடிநீர்க் கிணறுகள் மற்றும் பொது குளியல் கிணறுகள் போன்றவை இறைத்து சுத்தம் செய்யப்படுவதோடு, கிணற்றைச் சூழவுள்ள பகுதிகள் அவ்வப் பகுதி மக்களின் உதவியுடன் துப்புரவு செய்யப்படுகிறது.

♠ மக்கள் தற்போது மீளக் குடியமர்ந்துவரும் பின்வரும் மூன்று இடங்களிலும் புதிய நீர்க் கம்பங்கள் அமைத்து, குடிநீர்விநியோகம நடைபெற ஏற்பாடு செய்யப்படுகிறது: ஓடக்கரை ஒழுங்கை, புங்கன்குளவீதி, பாலவுடையார்வீதி,

யாழ்.நகர மக்கள் சுத்தமான குடிநீரைப் பருகி சுகமுடன் வாழ மாநகர சபை வழிசமைக்குமென நம்புவோமாக!

**வே.நவரத்தினராசா**
**பொறியியலாளர்**

## இலண்டன் தமிழ் ஒலிபரப்பு இடை நிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பாகும் இலண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒரு மணி நேர நிகழ்ச்சி கடந்த 5 தினங்களாக ஒலிபரப்பாகவில்லை என்று ஆங்கில இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தொழில நுட்பக் கோளாறு காரணமாகவே இந்த இணைப்பு மேற்கொளளப்படவில்லை என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட ஆங்கில இணையத்தளத்தினர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவை தொடர்பு கொண்டு இதுபற்றி வினாவிய போது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இந்த இணைப்பு மேற்கொள்ளப்படவில்லை என்றும் இதனை தீர்ப்பதற்கு இன்னும் ஒருவார காலம் செல்லலாம எனவும் தெரிவிக்கப்பட்டதாம்.

இலண்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இந்த விஷமத்தனமான பிரசாரம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள தமது கடும் ஆட்சேபத்தை இலங்கை அரசிற்கு அண்மையில் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-121)

## சிரங்கு நோய்த் தாக்கம்

(சுதுமலை)

மானிப்பாய்- சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 3மாதகாலப்பகுதியல் மட்டும் 42பேர் சிரங்கு நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்திய சாலைப் புள்ளி விபரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதில் 19 பேர் வரையில் வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் சிரங்கு நோய்க்கு சிகிச்சை பெற்றுள்ளனா. பொதுவாக தனிநபர் சுகாதாரம் பேணாத இடங்களிலும், சுற்றாடல் சுகாதாரம் திருப்தியற்ற இடங்களிலும் இந்நோய் பரவுகிறது.

இது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரக்குகளை ஒழுங்கு செய்து இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)



கைலாசபதி கலைஅரங்கில் நேற்றுமுன்தினம் சென்னை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வி.அரசு தமிழ் புனைகதை உருவாக்க வரலாறும், அச்சு ஊடகமும் என்ற தலைப்பில் உரையாற்றுவதையும், பார்வையாளர்கள் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

-அலுவலக நிருபர்-

## இ.தொ.கா.வைக் கைவிட்டு மு.கா.பக்கம் திரும்பியது அரசு

(யாழ்ப்பாணம்)

ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ளும் பொருட்டு, நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை உரிய பலனளிக்கவில்லையென அமச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால், அரசாங்கத்தின் கவனம் தற்போது முஸ்லிம் காங்கிரஸ் பக்கம் திரும்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடனான பேச்சுவார்த்தைகளும் முழுமையாகக் கைவிடப்படவில்லை என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவை பதவி நீக்கி சபாநாயகர் பதவிக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரை நியமிக்கும் அரசின் திட்டத்திற்கு ஆறுமுகன் தொண்டமான் ஆதரவு வழங்க மறுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

லொக்குபண்டாரவை சபாநாயகராகத் தெரிவு செய்ய எதிரணியினருடன் சேர்ந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வாக்களித்திருந்தது. ஆகையால், அவரை பதவி நீக்கும் திட்டத்திற்கு தம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது என ஆறுமுகன் தொண்டமான் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

மேலும் அரசியலமைப்பு சட்டத்தைத் திருத்தும் அரசின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க தொண்டமான் மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (உ-121)


**விவாத அரங்கு -4**

விடயம்

சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!

நடுவர்: சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்


அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

க.பொ.த (சா/த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள் வெளிவருகின்றன.

# துருக்கிய ரயில் விபத்தில் 36 பேர் பலி 43 பேர் காயம்

(அங்காரா)

துருக்கியத் தலைநகர் இஸ்ரான்புல்லிலிருந்து அங்காரா நகர் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த கடுகதி ரயில் வண்டி விபத்துக்குள்ளானதில் 36 பயணிகள் கொல்லப்பட்டதுடன் 43 பயணிகள் கடுங்காயங்களுக்குள்ளானார்கள்.



விபத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படாத போதிலும் விபத்தின் போது ஆறு கார் வண்டிகள் ரயிலால் இழுத்துச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

243 பயணிகளையும் ஒன்பது ரயில் ஊழியர்களையும் தாங்கிச் சென்ற இவ் ரயில் விபத்தில் 139 பேர் பலியானதாக ஆரம்பச் செய்திகள் தெரிவித்த பொழுதும் பின்னர் அந்தத் தொகை- தவறானதென்று ரயில்வே அதிகாரிகள் அறிவித்தனர்.

விபத்து நடந்த இடமெங்கும் உடல்கள் சிதறிக் காணப்பட்டன. காயமடைந்தவர்கள் ஸ்ரெச்சர்களில் தூக்கிச் செல்லப்பட்டனர். உயிரோடு இருப்பவர்களைத் தேடும் பணியில் மீட்புப் பணியாளர் ஈடுபட்டிருந்தனர்.

ஸ்தலத்திற்கு விஜயம் செய்த துருக்கிப் பிரதமர் ரயில் ஏர்டோகன், விபத்துக்கான காரணம் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை என்றும், 24 மணி நேரத்துக்குள் விபரம் அறிவிக்கப்படும் என்றும் கூறினார்.

(யே)



# பாகிஸ்தான் ஜோடியை மீட்ட ஜனாதிபதி

(இஸ்லாமபாத்)

தங்களது குல வழக்கத்துக்கு மாறாகக் காதல் திருமணம் புரிந்து கொண்ட பாகிஸ்தான் ஜோடி ஒன்றை மரணத்தின்பிடியிலிருந்த அந்நாட்டு ஜனாதிபதி மீட்டு நோர்வேக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சிந்து மாகாணத்தைச் சேர்ந்த வஷிட்டா அல்மானி எனும் பெண்ணும் போல்க் ஷேர் மஹர் எனும் ஆணும் 2003இல் காதல் திருமணம் செய்து கொண்டனர். இதனால் அல்மானி இனத்தவரும் மஹர் இனத்தவரும் இவ்விருவரையும் கொலை செய்யத் தேடி வந்ததுடன், இரு இனத்திற்கிடையிலும் கடும் மோதல் உருவாகும் நிலை ஏற்பட்டது.

இதனால் இருவரும் மீண்டும் ஊர் திரும்பிய பொழுது தமது பெரியவர்களால் சிறை வைக்கப்பட்டனர். இதனையடுத்துப் பெண்ணைக் கொலை செய்யும் முயற்சியில் அவனது இனத்தவர் இறங்கியபொழுது பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் அவர்களை மீட்டார். இவர்களுக்கு நோர்வே அரசாங்கம் புகலிடமளித்துள்ளதுடன் பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் இவர்களது திருமணத்தைச் சட்டபூர்வமாக அங்கீகரித்துள்ளதுடன், இது தொடர்பில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவது சட்ட விரோதம் என்று இரு இனத்துப் பெரியவர்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (யே)

# தலையில்லாத உடல் தைகிரிஸ் நதியில் கிடந்தது

(பக்தாத்)

ஈராக்கியப் பொலிஸ் அதிகாரிகளின் தகவலின்படி தலை துண்டிக்கப்பட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று தைகிரிஸ் நதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

பக்தாத்திற்கு வடக்கே 112 மைல் வடக்கே பெய்கி எனும் இடத்தில் தைகிரிஸ் நதியில் கண்டெடுக்கப்பட்ட இவ்வுடல் வெளிநாட்டவர் ஒருவருடையதென்றும் இது பற்றிய அடையாளக் குறிப்புக்களையோ அன்றேல் விபரங்களையோ உடனடியாக வழங்க முடியாமல் இருப்பதாக பக்தாத்தின் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.




ஒருவாரத்திற்கு முன்னரும் இதே இடத்தில் தலை துண்டிக்கப்பட்ட ஆணின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டது. இது ட்ரக் சாரதியான பல்கேரியர் ஒருவரது சடலம் என்று பின்னர் அடையாளம் காணப்பட்டது. கோரி லாவோஸ் எனும் 30 வயதான அவரது உடல் கைரேகை மூலமே அடையாளம் காணப்பட்டது.

(யே)

# ஜேர்மன் டெயில்மர் தொழிலாளர் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது

(பிராங்.:.போர்ட்)

கடந்த ஒருவாரமாக ஜேர்மனியில் இடம் பெற்றுவந்த டெயில்மர் மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனத்தின் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்துள்ளதாக அந்நிறுவனப் பேச்சாளர் பிராஸ் ஸ்ரோ அறிவித்துள்ளார்.



கம்பனியின் செலவுகளைக் குறைத்தல் எனும் கொள்கையின் கீழ் ஆறாயிரம் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கும் திட்டம் கைவிடப்பட்டு வருடத்திற்கு 612 மில்லியன் டொலர் செலவினம் குறைக்கப்படுதல் எனும் புதிய உடன்பாடு காணப்பட்டிருப்பதாகவும் தொழிலாளருக்கு மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் இலாபப்பங்குகள் வழங்கப்படுவதில் ஒருமைப்பாடு காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேர்சிடிஸ் பென்ஸ், வொக்ஸ்வகன், லான்ட் றோவர் மற்றும் ஜப்பானின் மிற்சுபிஸி வாகனங்களின் உரிமையாளராக டெயில்மர் நிறுவனம் விளக்கிவருவது குறிப்பிடத்தக்கது. உலகில் மிக இலாபகரமாக இயங்கும் தொழில் ஜாம்பவானான இந்நிறுவனம் மிக அண்மையிலேயே மிற்சுபிஸி நிறுவனத்தையும் உள்வாங்கியமை குறிப்பிடத்தக்கது.

(யே)








# ஒலிம்பிக்கில் ஆயுதத் தடை கிரேக்கம் அறிவித்தது

(எதென்ஸ்)

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் ஆயுதம் தாங்கிய காவலர்களுடன் விளையாட்டு அணிகள் பங்குபற்றுவதை கிரேக்க அரசாங்கம் தடை செய்துள்ளது.



நாடுகளின் தலைவர்கள், ஜனாதிபதிகள், மற்றும் அரசர்கள் ஆகியோர் தமது சொந்தப் பாதுகாவலருடன் பாதுகாப்புக்காக ஆயுதங்களை எடுததுச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் விளையாட்டு வீரர்களுக்கான பாதுகாப்பைக் கிரேக்க அரசாங்கமே வழங் கும் என்று கிரேக்க பொது ஒழுங்குகளுக்கான அமைச்சர் வோல்கராக்கிஸ் அறிவித்துள்ளார்.

ஆயினும், நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் செய்திப்படி ஆயுதம் தாங்கிய அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் அந்நாட்டின் வீரர்களுக்கு மெய்க்காவலராகச் செயற்படுவதற்கு கிரேக்கம் ஒழுங்குகளைச் செய்துள்ளதாகவும் அறியப்படுகிறது. (யே)

# 94 சிறை துஷ்பிரயோகங்களில் அமெரிக்க இராணுவம் தொடர்பு

(வாஷிங்டன்)



ஈராக்கின் அபுகிராய்ப் மற்றும் ஆப்கானிஸ்தானின் சிறைகளில் மொத்தமாக 94 கைதிகள் துஷ்பிரயோகச் சம்பவங்களில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டதாக அமெரிக்க செனட் சபை அறிவித்துள்ளது.

ஈராக்கின் அபுகிராய்ப் சிறைச்சாலையில் கைதிகள் நிர்வாணமாக்கப்பட்ட புகைப்படங்கள் கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் தொடர்பு சாதனங்களில் வெளியானதைத் தொடர்ந்து அமெரிக்க செனட்சபை இது தொடர்பிலான விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவப் பொலிஸாரில் ஏழு பேர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அதில் ஒருவருக்கு ஒரு வருடச் சிறையுட்பட பதவி நீக்கமும் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் 1 குவான்டன்மோ சிறைகளில் கைதிகள் பாரிய துஷ்பிரயோகத்திற்குள்ளாகிவிடுவதாகவும் 94 சம்பவங்களே பதியப்பட்டபோதும் இத்தொகை இதைவிட அதிகமானது என்றும் செனட்சபை அறிவித்துள்ளது.

(யே)

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு -குறள்

வலம்புரி

# தமிழரின் இரத்தம் குடித்த கறுப்பு யூலை

1983 யூலை உலகத் தமிழர்களால் மறக்கமுடியாத நாள். சிங்களப் பேரினவாதிகள் ஈழத் தமிழர்களின் இரத்தம் குடித்த நாள்.

இலங்கைத் தீவில் சிங்களவர்களும், தமிழர்களும் ஒற்றுமையாக வாழமுடியாது என்பதை தமிழ் மக்களுக்கு ஆணித்தரமாக எடுத்துரைத்த நாளும் இதுவே.

1983 யூலை 23 அன்று திருநெல்வேலியில் இராணுவத்தின் மீது இடம்பெற்ற தாக்குதலுக்காக தென்னிலங்கையில் வாழ்ந்த அப்பாவித் தமிழ் மக்களை சிங்களக் காடையர்கள் வெட்டியும், தீயிட்டுக் கொளுத்தியும் உயிர்ப்பலி எடுத்தனர். தமிழர்களின் சொத்துக்களை சூறையாடியதோடு பெறுமதி வாய்ந்த சொத்துக்களுக்கு தீ மூட்டினர்.

பெரும்பான்மை இனம் என்ற ஒரே காரணத்தினால் சிறுபான்மைத் தமிழர்களை குதறிக் கொன்றொழிப்பதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் அனுமதி கொடுத்தனர்.

சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டவேண்டிய சிங்களப் பொலிஸாரும், இராணுவத்தினரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமிழர்களின் இரத்தம் ஆறாக ஓடுவது கண்டு நிம்மதி மூச்சுவிட்டார்.

ஒரு நாட்டின் ஆட்சியாளர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், அவர்களின் கடமை என்ன என்பதை எல்லாம் மறந்து சிங்களப் பயங்கரவாதிகள் தமிழ் மக்களைத் தேடித் தேடி கொன்றொழித்தபோதெல்லாம் ஜே.ஆரின் அரசு மௌனம் சாதித்தது.

திருநெல்வேலியில் இடம்பெற்ற சம்பவத்தோடு தமிழ் மக்களை கூண்டோடு அழித்துவிடவேண்டும் என்பது ஜே.ஆரின் சிந்தனையாக இருந்தது. அதனை அமுல்படுத்துவதுதில் அவரின் ஆட்சியில் இருந்த அமைச்சர்கள் சிலரும் உடந்தையாக இருந்தனர். அந்த அமைச்சர்களின் பெயரை உச்சரிப்பதற்கு அவர்கள் இன்று உயிரோடு இல்லை என்பதால் அதனை இங்கு குறிப்பிடாது விட்டுவிடலாம்.

எனினும், அந்த அமைச்சர்களின் நிலை, அவர்களுக்கேற்பட்ட கதி இப்போது ஆட்சியில் இருப்பவர்களுக்கு நல்லதோர் பட்டறிவாக அமைய வேண்டும் என்பதே நமது விருப்பமாகும்.

அன்று 13 இராணுவத்தினரின் சடலத்தைக் கண்டு கொதித்தெழுந்த சிங்களப் பேரினவாதிகள் அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழித்தபோது பௌத்த பிக்குகள் பிரித்தோதி ஆசி வழங்கினர்.

தமிழர்களை வெட்டிக் கொன்று அவர்களின் சடலங்களை ஆறுகளில் வீசுங்கள். இதுவே நீங்கள் பௌத்த சிங்களத்திற்குச் செய்யும் பெரும் பணியாகும் என பௌத்த துறவிகள் கோஷம் எழுப்பினர்.

பிற உயிர்களுக்கு இம்சை செய்யாதே என்று கூறிய போதி மரத்து போதகனின் பாதையில் செல்வதாகக் கூறும் பிக்குகளின் பாதகச் செயலால் சிங்களக் காடையர்களின் இனவெறி பேயுருக் கொண்டாடியது.

அந்த கோர தாண்டவத்திற்கு பலியான தமிழ் மக்கள் ஏராளம். காப்பாற்றுவார் யாரும் இன்றி உயிர் துறந்த அப்பாவித் தமிழ் மக்கள் எழுப்பிய அவலக் குரல் தமக்கும் சேர்த்தே எழுப்பப்படுகிறதென்பதை அப்போது சிங்கள இனவாதிகளால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

ஆம், 13 இராணுவத்தின் சடலங்களுக்காக தாண்டவம் ஆடியவர்கள் ஆயிரக்கணக்கான படையினரின் சடலங்களைக் கண்டு கண்ணீர் விட்டனர் - கதறியழுதனர். ஆனால், வேறு எதனையும் அவர்களால் செய்ய முடியவில்லை.

தமிழர்கள் ஓடிய அதே வீதியில் சிங்களவர்களும் தலைதெறிக்க ஓடினர். எப்படி இருக்கிறது காலத்தின் மாற்றம்.

## யாழ்.மாவட்டத்தில் இயங்கும்

# விடுதிகளில் இடம்பெறும் சமூகச் சீர்கேடுகளைத் தடுக்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பயணிகள் தங்கும் விடுதிகள் சங்கப் பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய நடுவப் பணிமனையில் விடுதிகள் சங்கத் தலைவர் ர.இராஜதேவன் தலைமையில் நடைபெற்றது.

பயணிகள் தங்கும் விடுதிகள் நடாத்தும் 40ற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இக் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயற்பாடுகள் மற்றும் சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்தும் ஒன்றியப் பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம் கருத்துரை வழங்கினார்.

விடுதியின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் தொடர்பாக யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிப் பணிப்பாளர் சுதாஸ் கருத்துரை வழங்கினார்.

மற்றும் விடுதிகள் தொடர்பாக பின்வரும் தீர்மானங்கள் ஒருமனதாக எடுக்கப்பட்டன.

* விடுதிகள் நடைமுறை விதிகளுக்கமைய செயற்பட வேண்டும்.

* இதுவரை சங்கத்தில் பதிவு செய்யாத விடுதிகள் உடன்பதிவை மேற்கொள்ள வேண்டும். பதிவை மேற்கொள்ளாத விடுதிகள் எதிர்காலத்தில் இயங்க அனுமதிக்கப் படமாட்டாது.

* ஒவ்வொரு விடுதியும் சந்தாப் பணத்தை 5ஆம் திகதிக்கு முன் செலுத்த வேண்டும்.

* ஒவ்வொரு பயணிகள் விடுதிகளிலும் சமூகச் சீர்கேடுகள் உள்ளதாக அறியமுடிவதால், எதிர்காலத்தில் சமூகச் சீர்கேடுள் விடுதிகளில் நடைபெறுவதைத் தடுக்க வேண்டும்.

* விடுதிகள் இயங்கும் போது அயலர்வர்களுக்கு இடையூறு இல்லாமல் இருக்க வேண்டும். ஆகிய தீர்மானங் கள் எடுக்கப்பட்டன. (உ)

# ஹெல உறுமய விரைவில் அரசுடன் இணையும்

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நம்பிக்கை

(கொழும்பு)

ஆட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக ஜாதிக ஹெல உறுமய விரைவில் அரசாங்கத்துடன் இணையுமென வர்த்தக வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர். அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகளை ஆதரிப்பதற்கும் ஜாதிகஹெல உறுமயவினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசின் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு ஜாதிகஹெல உறுமய தீர்மானித்திருப்பதுடன், அரசாங்கத்திற்கு மேலும் பல ஒத்துழைப்புகளை வழங்கவும் அக்கட்சி தீர்மானித்துள்ளது எனக்குறிப்பிட்டார். (121)

# கையளிக்கப்பட்ட விவசாய நிலங்களைப் பார்வையிடலாம்

(தனங்கிளப்பு)

அண்மையில் படையினரால் கையளிக்கப்பட்ட தென்மராட்சி தெற்குப் பகுதி வயல் நிலங்கள் குறித்த வரைபடம் உள்ளிட்ட விபரங்கள் கைதடி கமநல சேவை நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

எனவே,அந்தப் பகுதி விவசாயிகள் கைதடி கமநல சேவை நிலையத்தில் சென்று தத்தமது நிலம் தொடர்பான விபரங்களைப் பார்வையிட்டு, எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளுமாறு மறவன்புலோ விவசாய சம்மேளனத் தலைவர் லீலா வினோதன் கேட்டுள்ளார்.

இதேவேளை,மேற்படி நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு வசதியாக இலவசமாக நிலத்தைஉழுது கொடுப்பதற்கும் விவசாய உள்ளீட்டுப் பொருட்களை இலவசமாக வழங்குவதற்கும் மறவன்புலோ விவசாய சம்மேளனம் தீர்மானித்துள்ளது. (37)

# கழிவகற்றல் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையால் கழிவுப் பொருட்கள் அகற்றும் பிரதேசம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வாரத்தில் ஒரு தடவை மாலிச் சந்தி வீதி, வதிரிச் சந்தி, புலவரோடை வீதி, மகாத்மாவீதி, கொடிகாமம் வீதி, விக்னேஸ்வரா வீதி, இராசகிராம வீதி, சம்பந்தர் கடைவீதி ஆகிய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## ௐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒருபோதும் சொல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மனநிலைக்கு இதயம் ஒருவனை அழைத்துக் கொண்டு போகிறது.

சுவாமி விவேகானந்தர்

## முல்லைத் தீவுக் கடற்பரப்பில்

# கடற் தொழிலாளர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்தொழில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் இருவர் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வண்ணான்குள இறங்கு துறையில் இருந்து படகொன்றில் சென்று கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரு மீனவர்களே கடற்படை யினரின் இத்தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில், முல்லைத் தீவைச் சேர்ந்த சோ. சுமன், ந.பிரபாகரன் ஆகியோரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

படையினரது இவ் அடாவடி செயற்பாடு குறித்து பாதிக்கப்பட்டவர்களால் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தாக்குதலுக்கு இலக்கான இரு மீனவர்களும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(4,62,64)

# கூட்டுறவுத் தின போட்டி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் 82வது சர்வதேச கூட்டுறவு தின விழாவினை முன்னிட்டு எதிர்வரும் 27ஆம் திகதி மாணவர்களுக்கிடையில் பேச்சுப்போட்டி,கட்டுரைப்போட்டி, வினாடிவினாப் போட்டி மற்றும் குழுப்பாடல் போட்டிஆகியவற்றை நடாத்தவுள்ளது.

இதற்கான பரிசளிப்பு விழா 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல்2.30மணிக்கு புனித மரியாள் பாடசாலை மைதானத்தில் ,தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சி.செம்மனன், யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன்,தமிழீழ நிர்வாகசேவை பொறுப்பாளர் கி.விஜிதரன்,ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (18)

# பல்கலையில் இலத்திரனியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த(உ/த) வகுப்பில் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இலத்திரனியல் கருத்தரங்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் அனுசரணையுடன்நடைபெறவுள்ளது.

இதில்,சகல பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் கேட்டுள்ளது.

(உ)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி ஆலய சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (18)

# ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு கிழக்கில் பாதுகாப்பு

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஈ.பி.டி.பி. தரப்பினருக்கு பூரண பாதுகாப்பு வழங்கவென சகல விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி.உறுப்பினரும் ஆலையடி வேம்புப் பிரதேச சபைத் தலைவருமான வேலாயுதம் இரவீந்திரன் கடந்த புதன்கிழமை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்தே, ஈ.பி.டி.பி. உறுப்பினருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

(60,10)

## திருநாள் திருப்பலிக்கு படையினர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள வசாவிளான் சென். ஜேம்ஸ் ஆலய திருநாள் திருப்பலியை கொண்டாடுவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அருட்திரு யோதிநாதன் அடிகளார் தலைமையில் திருநாள் கூட்டுத் திருப்பலி நடைபெறவுள்ளது. இத் திருப்பலி நிகழ்வில் பங்குகொள்ள விரும்பும் யாத்திரிகர்கள் நாளை காலை 7 மணிக்கு யாழ். சென் சாள்ஸ் மகாவித்தியாலயம் முன்பாகவும், பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திலும் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச-08)

# ஈழத் தமிழ் அகதிகள் 20 பேர் தலைமன்னார் வந்தனர்

(மன்னார்)

இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த இருபது ஈழத் தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

தமிழர் தாயகத்தில் இருந்து இடம்பெயர்ந்த இம் மக்கள் தமிழ் நாட்டின் கரூர், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வந்தனர். நேற்று முன்தினம் அதிகாலை இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிப் படகுகளில் பயணித்த இம் மக்கள் தலைமன்னார் கடற்படையினரிடம் சரணடைந்துள்ளனர். நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்களை நீதிபதி என்.எம்.எம். அப்துல்லா தமது சொந்தப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதித்துள்ளார். இம்மக்கள் கிளிநொச்சி செல்வாநகர், ஜெயபுரம், லக்சபானா, திருகோணமலை மாவட்டம், கும்புறுபிட்டி, உப்புவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மக்கள் மன்னார் நகர் கிராம அலுவலர் ஊடாக சொந்த பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு புறப்பட்ட 18 தமிழ் அகதிகள் மற்றும் மூன்று படகோட்டிகளை நேற்று தமிழ்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரியவருகிறது. (இ)

# கனேடிய சமூக ஆர்வலர் நால்வர் யாழ். வந்தனர்

(திருநெல்வேலி)

கனேடிய சமூக ஆர்வலர்கள் நால்வர் அடங்கிய குழுவினர் நேற்றைய தினம் யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்தனர்.கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின் பாதிப்புக்கள், சமூக மட்டநிலைப்பாடுகள் மற்றும் சுதேச மக்களின் எண்ண ஓட்டங்கள் என்பன குறித்து அறிந்து கொள்வதே இக் குழுவினரின் விஜயத்திற்கான நோக்கமாகும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை இக் குழுவினர் பல்கலைக்கழக மாணவர்கள், மதகுருமார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் படைத்தரப்பு அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

பின்னர்,மறுநாள் திங்கட்கிழமை திருகோணமலைக்குச் சென்று மேற்படி நிலைமைகளை குறித்து ஆராய்ந்து அறிந்த பின்னர் கொழும்புக்குச் செல்லவுள்ளனர். (இ-43)

## பெங்களூரில் தமிழர் மாநாடு

(கொழும்பு)

உலகத் தமிழர் பேரவையினால் நாளை பெங்களூரில் மாநாடு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

'உலகத் தமிழர் நாள்' என பெயரிடப்பட்டுள்ள இம் மாநாட்டில் இலங்கையிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களான மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா மற்றும் ஈழவேந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலகத் தமிழர்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டின் பின்னர் முக்கிய தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (ச-121)

## ஜயந்த தனபால...

தலைவர் ஹெலட்ட சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இச் சந்திப்பினை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய அவர் சமாதான செயலக பணிப்பாளரை சந்தித்து தமிழ்ச்செல்வனோடு நடத்திய பேச்சுவார்த்தை குறித்து விபரித்துள்ளார். (ச)

## புலிகளின்...

பிரதேசத்திற்குள் இந்த ஊடுருவல் இடம்பெற்றுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் இத்தகைய ஊடுருவல் தாக்குதல்களினால் இதுவரை ஒன்பது விடுதலைப் புலி போராளிகளும் மூன்று பொதுமக்களும் பலியாகியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் எமது தேசியத்தை பாழடையச் செய்யும் நோக்குடன் செயற்படும் இத் தேச விரோத சக்திகளை மக்கள் இனங்கண்டு இவர்களை எம் மத்தியில் இருந்து வெளியேற்றுவது தேசியத்தில் பற்றுள்ள அனைவரினதும் தலையாய கடப்பாடாகும் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## சமாதானப்...

வடக்கு - கிழக்கு புனர் நிர்மாணம் மற்றும் உடனடி மனிதாபிமான தேவைகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்தத் தயாராகவுள்ளோம். எனினும் இதற்காக முன்வைக்கப்படும் யோசனைகள் இறுதித்தீர்வை நோக்கிச் செல்வதற்கான எதிர்பார்ப்புடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபைப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக அமையமாட்டாது என்றும் ஜயந்த தனபால கூறியுள்ளார்.

(ச-121)

## நோர்வே...

அமைப்பின் மீது நடாத்தப்பட்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்களை சர்வதேச சமூகம் தடுத்து நிறுத்த வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. (ச-121-08)

## விடுதலைப்புலிகள்...

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டப் பிரதிநிதி மார்க்கிறேட் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் படைத்தரப்பின் சார்பில் 22 ஆவது படைப்பிரிவின் தளபதி சுனில் தென்னக்கோன், பிரிகேடியர் ஸீகர் மற்றும் விடுதலைப் புலிகளின் சார்பில் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் உட்பட முக்கிய பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.(ச-08)

## மீண்டும் யுத்தத்தை...

பின் அழுத்தமும் நம்பிக்கையூட்டலும், கருணாவின் பிளவும் பங்காளிக் கட்சிகளான ஜே.வி.பியின் போருக்கான அழுத்தமும் அரசாங்கத்தை யுத்தத்தின் பக்கம் திருப்பியிருப்பதாகவும் இதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான ஆலோசனையையும் இராணுவ உதவிகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் பிரதமர், இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியதாகவும் தெரியவருகிறது.

இலங்கை அரசின் இரகசிய போர்த் திட்டத்திற்கு இந்திய அரசும் மறைமுகமாக பச்சைக்கொடி காட்டி ஆதரவு வழங்கியிருப்பதாகவும் இதன் வெளிப்பாடாகவே இந்திய அரசு இராணுவ உதவியும், போர்க் கப்பலும் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் காலங் கடத்தி இழுத்தடிக்கப்படும் சமாதான நகர்வும் படையினரின் அதிகரித்துவரும் யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களும் ஆட்சியை தக்கவைக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளும் கிழக்கு மாகாணத்தின் நிலைமைகளும் மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கான சமிக்ஞையாக தென்படுகின்றது என இராஜதந்திரிகள் அச்சம் வெளியிட்டிருக்கின்றனர். (இ-05)

# இலங்கை 10 விக்கெட்டால் பங்களாதேஷை வென்றது

(கொழும்பு)

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆசியக் கிண்ணத்திற்கான இரண்டாம் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கைப் பந்துவீச்சாளர்களின் திறமையான பந்து வீச்சினால் பங்களாதேஷ் அணி ஒரு கட்டத்தில் 14.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 31 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

பங்களாதேஷ் அணியின் சார்பாக ஆரம்பத் துடுப்பாட்டவீரர் முஹமட் அஸ்ரபுள், இஸ்லாம் ராணா ஆகிய இருவரும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி பங்களாதேஷ் அணியின் மொத்த எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்தனர்.

இதில் அஸ்ரபுல் 69 ஓட்டங்களையும், இஸ்லாம் ராணா 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சமிந்தவாஸ் 3 விக்கெட்டினையும், மலிங்க, முரளிதரன், மஹரூவ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 33.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 191 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இலங்கை அணி சார்பில் சனத் ஜயசூரிய 101 பந்துகளை எதிர்கொண்டு 107 ஓட்டங்களையும், அவிஷ குணவர்த்தன 64 ஓட்டங்களையும் பெற்றனர். (இ-121)

## கைக்கடிகாரம் கண்டெடுப்பு

பெண்கள் அணியும் கைக்கடிகாரமொன்று யாழ். மின்சார நிலைய வீதியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் நேரில் வந்து தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

(ச)

## சோதனையிட முயற்சி

(கொழும்பு)

பிரபல ஊடகவியலாளரும் இராணுவ ஆய்வாளருமான டி.சிவராமின் இல்லத்தை கல்கிசை பொலிசார் நேற்று முன்தினம் சோதனையிட முற்பட்டதாகவும், அவர் இதற்கு அனுமதிக்காததையடுத்து அவர்கள் திரும்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இச்சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி மற்றும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் ஆகியோர் சிவராமின் இல்லத்தில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளர்களுக்கும், பொலிசாருக்கும் இடையில் பலத்த வாக்குவாதமும் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப்பட்டுவரும் சமகால அரசியல் கருத்தரங்கின் 16 ஆவது தொடர், எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய தொடரில் 'திட்டமிட்ட தமிழர் கலாசாரப் பிறழ்வுகள்' எனும் தலைப்பில் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் கருத்துரை வழங்கவுள்ளார்.இக் கருத்தரங்கில் ஆர்வலர்கள் எவரும் பங்கு பெறலாம். (18)

# கஜேந்திரன் எம்.பிக்கு எதிராக கையெழுத்து வேட்டை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரனுக்கு எதிராக ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது.

இந் நடவடிக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன ஈடுபட்டுள்ளார்.

பாராளுமன்றில் இடம்பெற்ற கஜேந்திரன் எம்.பியின் உரையைக் கண்டிக்கும் வகையிலேயே இக் கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-121)

# திருமலை துறைமுகப் பகுதியில் புலிகள் முகாம் அமைக்கின்றனர்

## குற்றஞ்சாட்டுகிறது அரசாங்கம்

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி விடுதலைப்புலிகள் தொடர்ந்தும முகாம்களை அமைத்து வருவதனால், அப்பகுதி அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்று அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அடுத்தவாரம் இலங்கை வரவுள்ள நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசனுடன் இது குறித்து அரசாங்கம் பேசவுள்ளது. இவ்விவகாரம் பற்றி கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் கணகாணிப்புக்குழுவினருடன் பேசியிருந்தார். அதன்போது போர்நிறுத்த உடன்படிக்கைக்கு கீழ் அடங்கும் இவ்விவகாரம் பற்றி தலையிட தமக்கு அதிகாரம் கிடையாது என்று கண்காணிப்புக்குழு அதிகாரிகள சிறில் ஹேரத்திற்கு தெரிவித்திருந்தனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பிரதேசங்கள் பற்றி போர்நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என கண்காணிப்புககுழுத் தலைவர் ரொண்ட் பியூறுஹெவ்டே பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவித்திருந்தார். இது பற்றி நோர்வேத் தரப்பினருடனும் ஆலோசிக்குமாறும் தெரிவித்தார்.

திருமலைத் துறைமுகத்தைச சுற்றி புலிகள் முகாம்களை அமைத்து வருகின்றனர். மீண்டும் ஒரு போர் ஏற்படும் நிலையில் இதனால் இராணுவம் துறைமுகத்திற்குள் செல்லமுடியாதிருக்கும். பின் அரசாங்கத்திடமிருந்து துறைமுகம் கைவிடுச்செல்லும் நிலை ஏற்படும் என்றுமு,

மணிராசன்குளம் முகாம்களை அண்டி புலிகள் பெருமளவு காணப்படுகிறார்கள் என்றும், தமக்கும் கருணாவிறகும் இடையிலான மோதல்களின்படி, அப்பிரதேசம் தம் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதாகவும் புலிகள் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும், இராணுவத்திற்கும் இதுபற்றி தெரியப்படுத்தியுள்ளார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-06)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.